RE/MAX Realtron Blue Force
Team Blue Force
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
Direct 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 28, 18 மார்ச் 2022 இதழ்:- 47

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

ஈழநாடு மின்னிதழ்
eelanadu.ca

# கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்திப்பேரணி! இலட்சக்கணக்கான மக்கள் திரண்டனர்!

அரசாங்கத்தின் தூர நோக்கற்ற சிந்தனை மற்றும் கொள்கைகளால் நாடு பாரிய நெருக்கடிகளை சந்தித்துள்ளதாக தெரிவித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக ஏற்பாடு செய்த பாரிய ஆர்ப்பாட்டம் கொழும்பில் 15மார்ச் 2022 (5ம் பக்கம் பார்க்க)



GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance

# அரசுக்கு 10லட்சம் நாங்கள் தருகிறோம்! எங்கள் பிள்ளைகளைத் தாருங்கள்!

அரசுக்கு ஒரு இலட்சம் இல்லை, பத்து மடங்கு பணத்தை நாங்கள் தருகின்றோம். நாம் கையளித்த எமது உறவுகளை தாருங்கள் என முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தலைவி ம.ஈஸ்வரி மற்றும் செயலாளர் பி.றஞ்சனா ஆகி யோர், 16 மார்ச் 2022 ஊடக சந்திப்பை நடத்தினர். இதில் அவர்கள் கருத்து (9ம் பக்கம் பார்க்க)



BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி! போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
Mortgage Alliance

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



**Team SIVA** WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



18 Years Real Estate Experience

HOMELIFE HIGHER STANDARDS


*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Markham & Brimortan



**Scarborough** $1,850
Bedrooms: 2 Washrooms: 2
All Utilities Included


### Derry/Goreway

**Mississauga** $498,900
Bedrooms: 2 Washrooms: 1
Great Opportunity First Time Buyers


### Burnamthorpe/Living Arts

**Mississauga** $499,000
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Kitchen

### Kennedy / Hwy 401

**Scarborough** $699,000
Bedrooms: 2+1 Washrooms: 2
Approx. 790 Sq Ft.

### Yonge & Finch

**Toronto** $819,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1150 Sf Plus Balcony

### Bleasdale/ Creditview

**Brampton** $849,000
Bedrooms: 3 Washrooms: 2
End Unit, Villa Freehold Home

### Park Rd S/Phillip Murray Ave

**Oshawa** $899,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Close To Schools, Shopping

### Rossland And Ravenscroft

**Ajax** $899,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Huge Open Concept Kitchen

### Mclaughlin/Elgin

**Brampton** $949,000
Bedrooms: 3+2 Washrooms: 4
Updated Kitchen, Pot Lights

### Brock & Dellbrook


**Pickering** $1,299,000
Bedrooms: 4+2 Washrooms: 4
Family Size Kitchen W/Out To Deck

### Markham/Ellesmere

**Scarborough** $1,299,999
Bedrooms: 4+2 Washrooms: 5
Newly Renovated


### Ellesmere/Conlins

**Scarborough** $1,299,999
Bedrooms: 4+1 Washrooms: 4
Basement W/Separate Entrance

### Westney/Rossland

**Ajax** $1,499,000
Bedrooms: 4 Washrooms: 5
Over 4600 Sq Ft Of Living Space.

### Bovaird/Torbram

**Brampton** $1,499,999
Bedrooms: 3+2 Washrooms: 4
Brand-New Kitchen

### Richmond St W/Peter St


**Toronto** $2,250
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout Of 790 Sq Ft

### Sheppard Ave E/ 404


**Toronto** $2,600
Bedrooms: 2+1 Washrooms: 2
Good Exposure W/Natural Light

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 JAFFNA SUPER STORES**
**1221 MARKHAM RD - 14**
**(MARKHAM / EELESMERE)**

**3 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**4 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**5 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**6 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

**மொன்றியல் தொடர்புகளுக்கு**
**மார்சே துர்க்கா**
**(514) 276 9262**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.






# சுவீடன் போன்று உக்ரேன் நடுநிலை நாடு ரஷ்யா முன் வைக்கும் நிபந்தனை! போர்நிறுத்தம், படைவிலகல் இடம் பெறலாம்?

ரஷ்யப்படைகளால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் தலைநகர் கீவில் ஊடரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு எந்த வேளையிலும் பெரும் சண்டை வெடிக்கக் கூடிய தான நிலைமை இருப்பதை சுயாதீனச் செய்தியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

போர் அதன் உச்சக் கட்டத்தை நெருங்கவுள்ள நிலையில் ரஷ்யா — உக்ரைன் இரு தரப்புப் பிரதிநிதிகள் இடையே சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. படையெடுப்பை நிறுத்தவேண்டுமாயின் உக்ரைன் அணி சேராமல் நடுநிலைபேணும் விதமான விட்டுக் கொடுப்புக்கு முன்வர வேண்டும் என்று ரஷ்யத் தரப்பில் நிபந்தனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

பனிப்போர் காலத்தில் சுவீடன், ஒஸ்ரியா போன்ற நாடுகள் மேற்கு கிழக்கு என எந்தப் பக்கமும் சாராமல் வகித்த நடு நிலையை ஒத்த ஒரு நிலைப்பாட்டை உக்கரைன் உத்தரவாதப்படுத்த வேண்டும் என்ற ரஷ்யாவின் நிபந்தனையை உக்ரைனின் சுயாதிபத்தியத்தைக் கேள்விக்குள்ளாக்குகின்ற நிபந்தனை என்று கூறி அதிபர் ஷெலன்ஸ்கி நிராகரித்து விட்டார்.





போர் தொடங்கிய பிறகு இரு தரப்பினரும் சந்திக்கின்ற நான்காவது சுற்றுப் பேச்சுக்கள் தற்சமயம் நடைபெறுகிறது. உக்ரைன் நேட்டோ நாடுகளுடன் அணிசேர்வதைத் தடுப்பதற்காக ரஷ்யா அதன் மீது படையெடுப்பை மேற்கொண்டுள்ளது. ரஷ்யா தனது ஆக்கிரமிப்பை நியாயப் படுத்துவதற்குச் சொல்லும் முதன்மைக் காரணம் உக்ரைன்-நேட்டோ இணைப்பு விடயம் ஆகும்.

ஆகவே நேட்டோவில் இணைவதில்லை என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை வரலாம். நேட்டோவில் இணைவது என்ற உக்ரைனின் அபிலாசையில் "சமரசம்" செய்யும் கட்டம் ஏற்படலாம் என்று அதிபர் ஷெலன்ஸ்கி ஓரிரு தினங்களுக்கு முன்பு கூறியிருந்தார்.

இவ்வாறான ஒரு நிலையிலே பேச்சுக்களில் சிறிதளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதை இருதரப்புகளும் ஒப்புக் கொண்டுள்ளன. ஆனால் அவை இன்னமும் அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகரவில்லை.இருதரப்பு சமாதானப் பேச்சுக் குழுக்களது தலைவர்களுடன் தொடர்புடையவட்டாரங்கள் பின்வரும் தகவல்களை வெளியிட்டுள்ளன.

நேட்டோவில் இணைவதற்கான தனது அனைத்து நம்பிக்கைகளையும் உக்ரைன் கைவிட வேண்டும் — (Ukraine drops all ambitions to join NATO)ஏனைய நாடுகளது தளங்கள் எதுவும் உக்ரைனுக்குள் இருக்காது என்பதை அது உத்தரவாதப்படுத்த வேண்டும்-

(Ukraine promises that other countries may not have bases in the country.) வெளிநாட்டுப் படைகளோ ஆயுதங்களோ நாட்டுக்குள் வராது என்பதை கீவ் உறுதிப்படுத்த வேண்டும் — (Ukraine guarantees that foreign soldiers and foreign equipment must not enter) இந்த மூன்று நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டால் போரை நிறுத்தித் தனது படைகளைத் திருப்பி அழைப்பதாக மொஸ்கோ தரப்பில் கூறப்பட்டிருக்கிறது.

இரு தரப்பு முரண்பாட்டுக்கு அடிப்படைக்காரணங்களாகிய இந்த மூன்று விவகாரங்களையும் ஏற்பதானால், தனது முக்கிய நிபந்தனை ஒன்றை வெளிநாடுகளது முன்னிலையில் ரஷ்யா எழுத்து மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என உக்ரைன் கேட்டிருக்கிறது.

எதிர்காலத்தில் ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமிக்க முற்பட்டால் நேட்டோ நாடுகள் இராணுவ உதவி அளிப்பதை உடன்படிக்கை மூலம் உத்தரவாதப்படுத்த வேண்டும் என்று அது கேட்டிருக்கிறது.

இந்த நிபந்தனைகள் இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டு உடன்படிக்கையாக வருவதற்கு கிட்டத்தட்ட தோராயமான (approximate agreement) வாய்ப்புகள் காணப்படுகின்றன என்று தொடர்புடைய வட்டாரங்களில் நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

பாரிஸிலிருந்து குமாரதாஸன். 17-03-2022

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# கோட்டாவை தெரிவு செய்த போது மகிழ்ந்தோம்! இப்போது வருந்துகின்றோம் - ஆனந்ததேரர்



ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய 69 இலட்ச மக்களும் தற்போது அரசாங்கத்தை கடுமையாக சபிக்கிறார்கள். நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ 6 மாத காலத்திற்காகவது அமைச்சு பதவியில் இருந்து விலக வேண்டும். மகா சங்கத்தினரால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவும் முடியும், ஆட்சியை வீழ்த்தவும் முடியும் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அபயராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியினை எதிர்க் கொண்டுள்ளது. நடுத்தர மக்கள் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஷில் ராஜபக்ஷ நிதியமைச்சராக பதவி வகித்ததன் பின்னரே நாட்டின் பொருளாதாரம் தீவிரமாக பாதிக்கப்பட்டுள்ளதாக நாட்டு மக்கள் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

அரசாங்கத்தை மாத்திரமல்ல அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்த 69 இலட்ச மக்களையும்,ஆட்சி மாற்றத்திற்காக முன்னின்று செயற்பட்டவர்களையும் ஒட்டுமொத்த மக்களும் தற்போது சபிக்கிறார்கள். ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்திய எம்மை நோக்கி 'மதகுருவே தற்போது சுகமா 'எனவும் மக்கள் நகைக்கிறார்கள்.

மகாசங்கத்தினரால் அரசாங்கத்தை ஸ்தாபிக்கவும் முடியும், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவும் முடியும். நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ அமைச்சு பதவி வகித்ததன் பின்னர் தான் பொருளாதாரம் தீவிரமாக பாதிக்கப்பட்டுள்ளதாக நாட்டு மக்கள் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வரை நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ ஆறுமாத காலத்திற்காகவாவது அமைச்சு பதவியில் இருந்து விலக வேண்டும். நாட்டு மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக கடும் விமர்சனங்களை முன் வைக்கிறார்கள். அரச நிர்வாகத்தில் காணப்படும் தவறை திருத்திக்கொண்டால் முன்னோக்கி செல்லலாம் என்பதை ஜனாதிபதிக்கு அறிவுறுத்தியுள்ளோம் என்றார்.

# 31ம் நாள் நினைவஞ்சலி

முல்லைத்தீவில் அமைந்துள்ள அன்பு இல்லப் பிள்ளைகளுக்கு கந்தரோடை மக்கள் ஒன்றியம் கனடாக் கிளையினரால் 17 மார்ச் 2022 வியாழக்கிழமை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கைலாயர் இராசரத்தினம் அவர்களது 31ம் நாள் நினைவுக்காக ஈழநாடு பத்திரிகை ஊடாக சிறப்பு உணவு வழங்கியுள்ளார்கள்.

திரு கைலாயர் இராசரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடுட்பத்தினர் உறவுகள் மற்றம் கந்தரோடை மக்கள் ஒன்றியம் கனடாக்கிளையினருடன் இணைந்து அன்பு இல்லக்குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள். கந்தரோடை மக்கள் ஒன்றியம் கனடாக்கிளையினூடாக இக்குழந்தைகளுக்கு உணவு, உடை, கற்றல் உபகரணங்கள் போக்குவரத்து வசதிகள் போன்ற அடிப்படை தேவைகளுக்கு உதவ ஆர்வமுடையவர்கள் எம்மை தொடர்பு கொள்ளலாம். தர்மசிறி (647-328-8880) செந்தூர் (647-991-4656) சிவா (647-716-7366)

கந்தரோடை மக்கள் ஒன்றித்தின் கன்னி முயற்சி வெற்றி பெறவும் அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளின் சார்பிலும் ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பிலும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.





ACTOUR

ALL COUNTRIES TOUR SERVICES

## மெக்சிக்கோ சுற்றுலா

ஒவ்வொரு மாதங்களிலும், மூன்றாவது கிழமைகளிலும், மெக்சிகோவில் உள்ள வேறு மாவட்டங்களுக்கும் வேறு நகரங்களுக்கும் 2022 தை மாதம் தொடக்கம், மார்கழிமாதம் வரை. 7 நாட்களுக்கு யாவும் உள்ளடக்கப்பட்டது.



| 3 star | 3½ star | 4 star | 4½ star | 5 star |
|---|---|---|---|---|
| REGULAR C$1,250 | REGULAR C$1,500 | REGULAR C$1,750 | REGULAR C$2,000 | REGULAR C$2,250 |
| SALE PRICE C$ 1,000.00 | SALE PRICE C$ 1,250.00 | SALE PRICE C$ 1,500.00 | SALE PRICE C$ 1,750.00 | SALE PRICE C$ 2,000.00 |

நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.

a1actour.com@gmail.com

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது: விமான சீட்டு, தங்குமிட வசதி, விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை, காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு, மது பானம், குளிர்பானம், சுடுபானம்

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078, TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007

CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

# கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்திப்பேரணி! இலட்சக்கணக்கான மக்கள் திரண்டனர்! ஜனாதிபதிச் செயலகம் முடக்கம்! சவப்பெட்டி வீசியதால் பதற்றம்!



அரசாங்கத்தின் தூர நோக்கற்ற சிந்தனை மற்றும் கொள்கைகளால் நாடு பாரிய நெருக்கடிகளை சந்தித்துள்ளதாக தெரிவித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக ஏற்பாடு செய்த பாரிய ஆர்ப்பாட்டம் கொழும்பில் 15 மார்ச் 2022 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முழு நாடும் அழிவில்: பொறுத்தது போதும் ஒன்றாய் அணித்திரளுங்கள் ' என்ற தொனிப்பொருளிலேயே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் செவ்வாய் பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

மேல் மாகாணத்தின் 10 மார்க்கங்கள் வழியாக ஆர்ப்பாட்டப் பேரணியானது கொழும்பு காலி முகத்திடலை வந்தடைந்தது. முதல் பேரணி தெற்கிலிருந்து கொழும்புக்கு வெள்ளவத்தையிலிருந்து கொழும்புத் திட்ட வீதி வழியாக ஆரம்பமாகியிருந்தது. நீர்கொழும்பு வீதியூடாக வந்த இரண்டாவது பேரணியும் கண்டி வீதி வழியாக வந்த மூன்றாவது பேரணியும் பேலியாகொடையில் சந்தித்து கொழும்பை நோக்கி சென்றடைந்தது. பாராளுமன்ற வீதி வழியாக கொழும்பை நோக்கி நான்காவது பேரணி வந்தது. மத்திய கொழும்பிலிருந்து வந்த ஐந்தாவது பேரணியும் கொழும்பு தெற்கிலிருந்து வந்த ஆறாவது பேரணியும் ராஜகிரியவில் இணைந்து கொழும்பை நோக்கி சென்றது.

கொட்டாவை மற்றும் நுகேகொட ஆகிய பிரதேசங்களில் இருந்து ஹைலெவல் வழியாக வந்த பேரணியும் அதேபோன்று 120 பஸ் வழித்தடத்தினூடாக வந்த பேரணியும் காலிமுகத்திடலை நோக்கி சென்றடைந்தன. அனைத்துப் பேரணிகளும் சுமார் 6.00 மணியளவில் கொழும்பு காலி முகத்திடலை அடைந்தன.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ திஸ்ஸ அத்தநாயக்க சரத் பொன்சேகா எரான் விக்ரமரத்ன இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட எதிர்க் கட்சி எம்.பிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் சவப்பெட்டிகளை ஏந்தியவாறும் அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் பாண் உள்ளிட்ட உணவுப்பொருட்களை ஏந்தியாவறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டாப் பேரணியானது ஜனாதிபதி செயலகத்தை சென்றடைந்ததன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டதுடன் ஜனாதிபதி செயலகத்துக்குள் உள்நுழைய முற்பட்ட நிலையில் அதனை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தடுத்து நிறுத்தினர்.

ஜனாதிபதி செயலகத்துக்குள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்த நிலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இதனையடுத்து ஆர்ப்பாட்டாக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் சவப்பெட்டியை எரித்தும் தீப்பந்தங்களை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் 'கோட்டாபயவை வீட்டுக்கு போ ஜனாதிபதி தேர்தலுக்கு அழைப்பு விடுக்கவும்' என்ற கோஷங்களையும் அவர்கள் எழுப்பினர். அத்துடன், சுலோக அட்டைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதன்போது, ஜனாதிபதி வளாகத்துக்குள் சவப்பெட்டியும் மாலையும் வீசபபட்டன. தொடர்ந்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெளியே வருமாறு கோரியும் அவர்கள் கோஷங்களை எழுப்பியதுடன் உள்ளேயும் நுழைய முயன்றனர். பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் தடுத்து நிறுத்தினர். அவர்களை மீறி உள்ளே நுழைய முயன்றவர்களால் பதற்றம் ஏற்பட்டது.

சஜித் தலைமையில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் அவரின் கட்சியினர், பங்காளி கட்சியினர் பொது மக்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

## கட்சி அரசியலும் தமிழ்த்தேசிய அரசியலும்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி (முன்னணி) வவுனியாவில், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்களை திரட்டி, 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றனர். முன்னர் யாழ்ப்பாணத்தில் செய்ததை இப்போது வவுனியாவில் செய்திருக்கின்றனர். வெளித்தோற்றத்தில் நோக்கினால், அவர்கள் தமிழ்த் தேசிய அரசியலுக்காக குரல் கொடுப்பது போன்று தெரியலாம் ஆனால், உண்மை அதுவல்ல. அது முற்றிலும் ஒரு கட்சியின் நடவடிக்கை.

தமிழ்த் தேசியகட்சிகள் என்போரின் நடவடிக்கைகளை உற்று நோக்கினால் ஒரு விடயத்தை தெளிவாகக் காணலாம். அதாவது மக்கள் தங்களை மறந்து விடக்கூடாது என்பதற்காகவே சில விடயங்களை செய்கின்றனர். அவைகள், தமிழ்த் தேசியத்தின் பெயரால் இடம் பெறுகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ்மக்கள் கூட்டணியும் ஒன்றிணைந்து இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதியதை தொடர்ந்தே, குறித்த கட்சிகளை எதிர்ப்பதன் மூலம், மக்களை அணி திரட்டும் முயற்சியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியினர் ஈடுபட்டனர். ஒரு கட்சியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

ஆனால் 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கட்சியினர் தாங்கள் இதுவரை கூறி வரும் விடயங்களை வெற்றி கொள்வதற்காக மக்களை அணி திரட்டி போராட்டங்களை நடத்தவில்லை.

முக்கியமாக கொழும்பை முடக்கும் வகையில் போராட்டங்களை நடத்தவில்லை. கொழும்பை முடக்காமல், சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களை திரும்பிப் பார்க்கப் போவதில்லை. ஏனெனில், வடக்கு கிழக்கில் ஏற்கனவே பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு, போராட்டங்கள் நடந்திருக்கின்றன. வடக்கில் மக்களை அணி திரட்டும் செயல்பாடுகளால், அரசாங்கத்தை இறங்கி வரச் செய்ய முடியுமென்றால் அரசியல் தீர்வை எப்போதோ அடைந்திருக்கலாம்! எனவே, வடக்கு கிழக்கில் மக்களை அணி திரட்டும் நோக்கிலும், மக்கள் மத்தியில் ஏதோவோர் அதிர்வலையை ஏற்படுத்த வேண்டுமென்னும் நோக்கிலும், மேற்கொள்ளப்படும் அரசியல் நடவடிக்கைகள் அனைத்துமே, தேர்தல் நலன்களை அடிப்படையாகக் கொண்ட செயல்பாடுகள் மட்டுமே!

மக்கள் மத்தியில், தங்களது கட்சியின் ஆதரவை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தான். தமிழ் அரசு கட்சியின் ஏற்பாட்டில், பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்துக்கள் சேகரித்தமையும் கூட, இப்படியான ஒன்று தான். வடக்கு கிழக்கில் இடம் பெறும் ஆர்பாட்டங்கள், கடையடைப்புக்களையே ஒருபொருட்டாக கருதாத அரசாங்கம், சில ஆயிரக்கணக்காணவர்களின் கையெழுத்துக்களை கருத்தில் கொண்டு தனது நிலைப்பாடுகளை மாற்றுமா?

உண்மையில் தமிழ் அரசியல் கட்சிகள் கூறிவரும் விடயங்களை அடைவதற்கு, அவர்களிடம், எந்தவொரு வேலைத்திட்டமும் இல்லை. இந்த நிலையில் நாங்கள் இங்கு தான் இருக்கின்றோம் என்பதை நிரூபிக்கும் வகையிலேயே சில செயல்பாடுகளை முன்னெடுத்துவருகின்றனர். ஒருநாள் மக்களை அணி திரட்டுவதன் மூலம் எதனை சாதிக்க முடியும்? பிரகடனங்களை செய்வதன் மூலம் எதனை செய்ய முடியும்? தமிழ் மக்கள் பேரவையின் தலைமையின் கீழ், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், டி. பி. எல். எவ் (புளொட்) ஈ. பி. ஆர். எல். எவ். ஆகிய மூன்று கட்சிகளின் ஆதரவுடன், மக்களை அணிதிரட்டி, பெரும் நிதிச் செலவில், எழுக தமிழ்' நிகழ்வுகள் இடம் பெற்றன. அனைத்தும், ஒருநாள் கிரிக்கெட் போன்று முடிவுற்றது. ஏற்றியிறக்கப்பட்ட மக்களும் கலைந்து போயினர்.(20ம் பக்கம் பார்க்க)


Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Phone : 416-289-9229

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# இலங்கையில் மோசமடைந்து வரும் பொருளாதார நிலைமை:- கனடா பிரிட்டன் தமது நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை!

இலங்கையில் நிலவும் சீரற்ற பொருளாதார நிலைமை காரணமாக உணவு தட்டுப்பாடு ஏற்படும் என கனடா இலங்கைக்கு பயண ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

இலங்கையில் பொருளாதாரம் மோசமடைந்து வருவதாகவும், இதன் காரணமாக மருந்துகள், எரிபொருள், உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதாகவும் கனடா தனது பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மளிகைக் கடைகள், எரிவாயு நிலையங்கள் மற்றும் மருந்தகங்களில் நீண்ட வரிசைகள் இருக்கலாம். மின்சாரம் துண்டிப்பு மேற் கொள்ளப்படலாம். பொருளாதார ஸ்திரமின்மை சுகாதாரம் உட்பட பொது சேவைகளை வழங்குவதையும் இது பாதிக்கலாம்” என்று கனடா தனது பயண ஆலோசனையில் எச்சரித்துள்ளது.

கனேடிய அரசாங்கம் இலங்கைக்கு பயணிக்கும் தனது குடிமக்களிடம் உணவு, நீர் போன்றவற்றை கையில் வைத்திருக்குமாறும், போதியளவு மருந்துகளை கைவசம் வைத்திருக்குமாறும், உள்ளூர் ஊடகங்களை கண்காணிக்குமாறும் கூறியுள்ளது.

இதேபோன்று மருந்துகள், எரிபொருள் மற்றும் உணவு உள்ளிட்ட பொருட்களுக்கான பற்றாக்குறை காரணமாக பொருளாதார நிலைமை மோசமடைந்து வருவதாகக் கூறி இலங்கைக்கு செல்வதற்கான பயண ஆலோசனையை பிரித்தானியா புதுப்பித்துள்ளது. மருந்துகள், எரி பொருள் மற்றும் உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளின் பற்றாக் குறையுடன் அந்த நாட்டின் பொருளாதார நிலைமை



மோசமடைந்து வருவதாக பிரித்தானியா எச்சரித்துள்ளது.

இறக்குமதிக்கு செலுத்துவதற்கு பணம் இல்லாதமை காரணமாக இலங்கை தற்போது அடிப்படைத் தேவைகளில் பற்றாக்குறையை அனுபவித்து வருவதாக பிரித்தானியா தமது குடிமக்களுக்கு தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் முடக்க கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம் என்றும், நாட்டில் குறுகிய பயணக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படலாம் என பிரித்தானிய அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பலசரக்கு கடைகள், எரிவாயு நிலையங்கள் மற்றும் மருந்தகங்களில் நீண்ட வரிசைகள் இருக்கலாம் எனவும் பிரித்தானியா குறிப்பிட்டுள்ளது. அத்துடன் மின்சார உற்பத்திக்கான நெருக்கடி காரணமாக சூழற்சி முறையில் அதிகாரிகள் மின்வெட்டை நடைமுறைப்படுத்தலாம் எனவும் பிரித்தானியா, தமது பிரஜைகளுக்கான பயண ஆலோசனையில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை விமான பயணச் சீட்டுகளுக்கான கட்டணங்கள் 27வீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்தார். உடனடியாக அமுலாகும் வகையில் இந்த கட்டண அதிகரிப்பு நடை முறைக்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் விநியோகிக்கப்படும் அனைத்து வகையான விமான பயணச் சீட்டுகளுக்கான கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி - கூட்டமைப்பு பேச்சுவார்த்தை ஒத்தி வைப்பு!

ஜனாதிபதி கோட்டாபயவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையே 15 மார்ச் 2022 செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறவிருந்த சந்திப்பு திடீரென ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கும், இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் செவ்வாய் மாலை 3.30 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடலுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்நிலையில் எதிர்க்கட்சியினர் அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பில் நடத்திவரும் போராட்டத்தை தொடர்ந்து, அந்தக் கலந்துரையாடல் திடீரெனப் பிற்போடப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 25ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு சந்திப்பு இடம்பெறும் என ஜனாதிபதி செயலாகத்தால், தமிழ்த்



தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்
Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை
Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# இந்த நெருக்கடி என்னால் உருவாக்கப்பட்டது அல்ல! சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்பட அரசு முடிவு செய்துள்ளதென ஜனாதிபதி தெரிவிப்பு!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ 16 மார்ச் 2022 புதன்கிழமை நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை ஆற்றி இருக்கிறார். அந்த உரையின் தமிழ் வடிவம் இதோ...

அதி வணக்கத்திற்குரிய மகா சங்கத்தினரின் அனுமதியுடன், ஏனைய மதத் தலைவர்களே! தாய்மார்களே! தந்தையர்களே! சகோதர சகோதரிகளே, அன்பான குழந்தைகளே மற்றும் நண்பர்களே

இன்று ஒரு சவாலான நேரத்தில் நான் உங்களிடம் உரையாற்றுகிறேன். உங்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வை நான் நன்கு அறிவேன். எரிவாயு தட்டுப்பாடு அதே போன்று, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின் வெட்டு போன்ற பிரச்சினைகளை நான் நன்கு அறிவேன். கடந்த இரண்டு மாதங்களாக பொதுமக்கள் அனுபவித்த பல இன்னல்கள் குறித்தும் நான் நன்றாக உணர்ந்துள்ளேன். அதற்காக எங்களால் செய்ய முடிந்த அனைத்தையும் நாம் செய்தாலும், எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் இந்த நிலைமை தொடரும் என்பதை நான் அறிவேன்.

நான் செய்யும் செயல்களுக்கு நான் பொறுப்பேற்கிறேன். பொதுமக்கள் அனுபவிக்கும் ஒரு சில சிக்கலான வாழ்க்கை முறைகளுக்கு தீர்வு காண இன்று நான் கடுமையான முடிவுகளை எடுக்க உறுதி பூண்டுள்ளேன். அதற்கு உதவ தேசிய பொருளாதார சபையையும், அதற்கு ஒத்துழைப்பு வழங்க ஒரு ஆலோசனைக் குழுவையும் நியமித்தேன். இதன் மூலம், நான் எடுக்கும் முடிவுகள் செயற்படுத்தப்படுகிறதா என்பதை தொடர்ந்து கண்காணிக்கவும் நடவடிக்கை எடுப்பேன். எனவே, மக்களுக்காக நான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நம்பிக்கை வைக்குமாறு நான் உங்களை முதலில் கேட்டுக் கொள்கிறேன்.

நான் மக்களின் சிரமங்களை நன்கு அறிந்த ஒருவன். நாங்கள் எதிர் கொண்ட கொடூரமான பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் முன்னணியில் இருந்த படைவீரர் மற்றும் யுத்தத்தில் சிக்கிய அப்பாவி பொதுமக்கள் எதிர் கொண்ட அனைத்து சிரமங்களையும் நன்கு புரிந்து கொண்டு அவற்றை முறையாக நிர்வகிக்க என்னால் முடிந்தது.

இன்றைய இக்கட்டான நிலைமை, நம் நாடு மட்டும் முகங்கொடுக்கும் ஒரு விடயமல்ல. முழு உலகமும் ஏதோ ஒரு வகையில் ஒரு சிக்கலான சூழ்நிலையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன. கொவிட் நோய்த் தொற்றினால் அதிகரித்த கப்பல் கட்டணங்கள், பொருட்களின் விலை அதிகரித்தல் மற்றும் சில பொருட்களின் தட்டுப்பாடு ஆகிய அனைத்தும் நம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை. ஆனாலும் நாம் மக்களின் பக்கம் நின்று நிவாரண நடைமுறைகளைப் பின்பற்றுகிறோம்.

இந்த நெருக்கடி ஒரு போதும் என்னால் உருவாக்கப்பட்டதொன்று அல்ல. அன்று இந்த நெருக்கடியை உருவாக்குவதற்கு காரணமானவர்கள் இன்று மக்கள் முன்னிலையில் அரசாங்கத்தை விமர்சித்து வரும் நிலையில், இந்த நெருக்கடியை விரைவில் தீர்த்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவே நான் முயற்சிக்கிறேன். இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில், ஒரு நாட்டின் அரசியல்வாதிகளினதும் புத்திஜீவிகளினதும் பொறுப்பு ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்கு கூட்டாக தீர்வு காண்பதேயாகும். இன்றைய பிரச்சினைகளுக்கு மூலகாரணம் நமது அந்நிய செலாவணி நெருக்கடி ஆகும்.



ரூபாய் நெகிழ்வுடன் இயங்குவதற்கு இடமளிக்கப்பட முன்னர் இருந்த நிலைமையின் பிரகாரம், இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் ஏற்றுமதி வருமானம் 12 பில்லியன் டொலர்கள் ஆகும். கடந்த இரண்டு மாத கால தரவுகளின்படி, இந்த ஆண்டு 22 பில்லியன் டொலர்கள் இறக்குமதி செலவை நாம் ஏற்க வேண்டியுள்ளது. அதன்படி, 10 பில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகப் பற்றாக் குறை உருவாகும்.

அண்மைக் கால தரவுகளின்படி, இந்த ஆண்டு சுற்றுலாத்துறையிலிருந்தும் அதேபோன்று தகவல் தொழிநுட்பம் போன்ற சேவை ஏற்றுமதியில் இருந்தும் சுமார் 03 பில்லியன் டொலர்கள் கிடைக்கக்கூடியதோடு, வெளிநாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 02 பில்லியன் டொலர்கள் கிடைக்கும். அதன்படி, வர்த்தகப் பற்றாக்குறை 05 பில்லியன் டொலர்களாக இருக்கும்.

இதற்கிடையில், இந்த ஆண்டு 6.9 பில்லியன் டொலர் கடன் தவணைகள் மற்றும் இறையாண்மை பத்திரங்களுக்கு செலுத்தப்பட வேண்டும். அப்போது 11.9 பில்லியன் டொலர் பற்றாக் குறை ஏற்படும். ஏனைய கடன் உதவிகள் மற்றும் முதலீடுகளாக 2.5 பில்லியன் டொலர்கள் கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. இந்த வகையில் அந்நியச் செலாவணியில் மொத்தம் 9.4 பில்லியன் டொலர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

ஆனால் ரூபாய் நெகிழ்வின் பின்னர் ஏற்றுமதி வருமானம் 13 பில்லியன் டொலர்கள் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இறக்குமதி செலவை 22 பில்லியன் டொலரில் இருந்து 20 பில்லியன் டொலர்கள் வரை குறைத்துக் கொள்ளவும் முடியும். அப்படியானால், வர்த்தக பற்றாக் குறையை 07 பில்லியன் டொலர்கள் வரை குறைக்க முடியும். அதைத்தான் நாம் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

அதே போன்று, சேவை ஏற்றுமதியின் மூலம் 04 பில்லியன் டொலர்கள் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 05 பில்லியன் டொலர்களையும் எதிர்பார்க்கலாம். அதன்படி, நமது வர்த்தக பற்றாக்குறை 2.4 பில்லியன் டொலர்கள் ஆகும். இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், நமது அந்நியச் செலாவணி கையிருப்பை அதிகரிக்கவும் நாம் செயற்பட வேண்டும்.

இதற்காக, சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் நட்பு நாடுகளுடன் எங்களது கடன் தவணையை திருப்பிச் செலுத்துவது குறித்து நாம் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம். இதனை எமது நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் புதிய பொறிமுறையின் மூலம் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி வருகின்றது. சர்வதேச நாணய நிதியத்துடனான நேற்றைய கலந்துரையாடலும் இந்த நோக்கத்துடனேயே இடம் பெற்றது. அந்த கலந்துரையாடல் மூலம் நாம் எதிர்பார்ப்பது, ஒரு வருடத்துக்கு நாங்கள் செலுத்த வேண்டிய கடன் தவணைகள், இறையாண்மை பத்திரங்கள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவதாகும். சர்வதேச நாணய நிதியத்துடனான எனது கலந்துரையாடலுக்குப் பிறகு, சாதக, பாதகங்களை ஆராய்ந்து அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு நான் முடிவு செய்தேன்.

கடந்த காலத்தில் நான் எடுத்த சில முடிவுகளால் இறக்குமதிச் செலவை பெருமளவு கட்டுப்படுத்த முடிந்தது. இந்த பிரச்சினையை முன்கூட்டியே கண்டு கொண்டதால் இரண்டு ஆண்டுகளுக்கு முன், வாகனங்களை இறக்குமதி செய்வதை நிறுத்தி விட்டோம். மேலும், உள்நாட்டில் நமது தேவைகளை பூர்த்தி செய்யும் கைத்தொழில்களை ஊக்குவித்தோம். அதே போன்று, பல அத்தியாவசியமற்ற உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதை நிறுத்தி விட்டு, அந்த பயிர்களை நம் நாட்டில் பயிரிடுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். அவற்றின் வெற்றிகரமான முடிவுகளை இப்போது காண்கிறோம்.

இறக்குமதிச் செலவைக் கட்டுப்படுத்துவதில் நாம் எதிர் கொள்ளும் மிகக் கடுமையான பிரச்சினை, உலகச் சந்தையில் எண்ணெய் விலைகள் வேகமாக அதிகரிப்பதாகும். சராசரியாக, நமது இறக்குமதிச் செலவில் 20 சத வீதத்திற்கும் அதிகமாக எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடப்படுகிறது. கடந்த சில மாதங்களில் மட்டும் உலக சந்தையில் எரிபொருளின் விலை இரு மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் தான் நம் நாட்டிலும் எரிபொருளின் விலை அதிகரிக்கப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. நம் நாட்டில் (20ம் பக்கம் பார்க்க)


LAW OFFICE
*of*
THELMA WILLIAMS

Barrister, Solicitor, Notary Public, Commissioner (ON)
LL.B (Sri Lanka)

- ❑ FAMILY LAW:
  - Divorce
  - Separation
  - Property Division
- ❑ REAL ESTATE
- ❑ WILLS and ESTATES
- ❑ EMPLOYMENT LAW
  - ODSP, CPP disability
  - Wrongful Dismissal
  - Long-term Disability
- ❑ ADMINISTRATIVE LAW
- ❑ POWERS OF ATTORNEY, AFFIDAVITS, STATUTORY DECLARATIONS

- ❑ விவாகரத்து, சட்டப்படி பிரிதல், சொத்துக்களை பிரித்தல் போன்ற குடும்ப வழக்குகள்,
- ❑ காணி, வீடு வாங்குதல், விற்றல் தொடர்பான சட்டங்கள்
- ❑ உயில் மற்றும் எஸ்ரேற்ஸ்
- ❑ தொழில்சார் சட்டம்
- ❑ நிர்வாக சட்டம்
- ❑ சட்ட ஆவணங்களை உருவாக்குதல்

கனேடிய சட்டத்துறையில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்ட வல்லுனர்களின் நம்பிக்கையும், உத்தரவாதமுமான சேவை

Quality, Dependable Service with many years of Canadian legal experience.

TEL:647-777-8424
Suite #300, 10 Milner Business Court,
Scarborough, Ontario M1B 3C6
(just 2 minutes north of HWY 401)

PLEASE CALL FOR AN APPOINTMENT

# யாழ்.மாவட்டச் செயலகமா? அரசியல் கட்சி அலுவலகமா?

## அங்கஜனுக்கு ஆப்பு வைக்க யாழ்.செயலகத்தை முற்றுகையிட்ட ஈ.பி.டி.பி!

பிரதேச அபிவிருத்திகளை முன்னெடுக்கும் செயற்பாடுகளின் போது யாழ். மாவட்ட செயலகத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளை கண்டித்து யாழ்ப்பாண மாவட்ட செயலகம் முன்பாக கண்டனப் போராட்டம் இடம் பெற்றது. ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஏற்பாட்டில் 13 மார்ச் 2022 காலை 10.00 மணியளவில் யாழ்ப்பாண மாவட்ட செயலகம் முன்பாக ஒன்று கூடிய அக்கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் வாயில் கதவை அடைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது அங்கு வந்த யாழ் மாவட்ட செயலாளரிடம் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மகஜரொன்றை கையளித்ததுடன் 10 நாட்களுக்குள் பிரச்சனைக்குரிய தீர்வு காணப்பட வேண்டுமெனவும், இல்லை எனில் முழுமையாக மாவட்ட செயலகத்தை முடக்குவோம் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மேலும் தெரிவிக்கையில், யாழ் மாவட்ட அபிவிருத்திகளை பிரதேச ரீதியாக முன்னெடுக்கும் போது ஏற்கனவே அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்களை கணக்கில் கொள்ளாது தன்னிச்சையான செயற்பாடுகளில் மாவட்ட செயலகம் ஈடுபட்டுவருதால் மக்களின் அவசிய தேவைகள் புறக்கணிக்கப்படுவதை மக்கள் பிரதிநிதிகளான எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

குறிப்பாக பிரதேச சபையை மையப்படுத்திய அபிவிருத்தி திட்டங்களில் மக்கள் பிரதிநிதிகள் முழுமையாக புறக்கணிக்கப்படும் நிலை யாழ் மாவட்டத்தில் மட்டும் காணப்படுகின்றது. அத்துடன் மக்களின் நலன்கள் அனைத்தும்



மக்களின் விருப்புக்கமைவான தெரிவுகளாகவே இருக்க வேண்டும் எனவும் கோட்டபய ராஜபக்ச கூறியுள்ளார். ஆனால் யாழ் மாவட்டத்தில் மாவட்ட செயலகம் சொல்வது ஒன்று செய்வது ஒன்றாக காணப்படுகின்றது. மாவட்ட செயலகத்தின் இவ்வாறான நிலைமை மக்களின் தேவைகருதிய செயற்பாடுகளுக்கு இடையூறாக இருப்பதை பிரதேச மக்கள், மக்கள் பிரதிநிதிகளாகிய எம்மிடம் நாளாந்தம் முறையிட்ட நிலையில் போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளனர். யாழ். மாவட்ட செயலாளரை நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது விருப்புக்கேற்ப ஆட்டுவிப்பதான குற்றச்சாட்டுகள் உள்ள நிலையிலேயே இந்தப் போராட்டம் இடம் பெற்றுள்ளது.


இதேவேளை யாழ்ப்பாணம் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களை உடனடியாகக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்டச் செயலர் க.மகேசனுக்கு, பிரதமர் அலுவலகத்திலிருந்து அவசர கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவுக்கு பிரதமர் அலுவலகப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள கீதநாத் காசிலிங்கத்தின் ஒப்பத்துடன் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# பசில் அமெரிக்காவுக்கு ஓடும் வரை போராட்டம் தொடரும்!

## நான் கொல்லப்படலாம் அல்லது சிறையில் அடைக்கப்படலாம் - கம்மன்பில



இலங்கை படுமோசமாக வீழ்ச்சியடைய காரணமாக இருந்த பசில் ராஜபக்ச அமெரிக்காவிற்கு திரும்பும் வரை போராட்டத்தை தொடரப் போவதாகவும், அவ்வாறு அவர் செல்லவில்லையாயின் விரட்டியடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில எச்சரித்துள்ளார். இலங்கையின் தற்போதை நெருக்கடி நிலைமை தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன் போது தொடர்ந்தும் பேசிய அவர் திட்டமிட்டு பொருளாதாரத்தை வீழ்ச்சியடை செய்யும் தந்திரம் காரணமாகவே தற்போது மக்கள் வரிசைகளில் நின்று கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இது ஏற்பட்ட நிலைமையல்ல. ஏற்படுத்தப்பட்ட நிலைமை. இந்த நிலைமை ஏற்பட காரணமாக இருந்த பசில் ராஜபக்ச என்ற அழகற்ற அமெரிக்கர் மீண்டும் அமெரிக்காவுக்கு செல்லும் வரை போராட்டத்தை நிறுத்த போவதில்லை. அவர் திரும்பிச் செல்லவில்லை என்றால் விரட்டியடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு எதிராக உள்ளுக்குள் இருந்து நடத்திய (20ம் பக்கம் பார்க்)

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

18 மார்ச் 2022 வெள்ளிக்கிழமை
பங்குனி உத்தரம்
உபயம்:- ச.நிருஜன், தனுஷன், ஈஸ்வர்

02 ஏப்ரல் 2022 சனிக்கிழமை
கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் 10வது வருடாந்த மகோற்சவம் ஆரம்பம்
கொடியேற்றம் காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

16 ஏப்ரல் 2022 சனிக்கிழமை
பகல்:- தீர்த்தத் திருவிழா
இரவு:- கொடியிறக்கம்

16 ஏப்ரல் 2022 சனிக்கிழமை
சித்ரா பௌர்ணமி அன்று தாயாரை இழந்தவர்கள் பிதிர் தர்ப்பணம் செய்யும் நாள். பிதிர் தர்ப்பணம் செய்வதற்கு ஆலயத்தில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. காலை 6.00 மணியிலிருந்து ஆலயத்திற்கு வந்து பிதிர்தர்ப்பணம் செய்து கொள்ளலாம்

இவ்வண்ணம்:- ஆலய தர்மகர்த்தா சபையினர்

21 பெப் 2022 முதல் இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# காணாமல் போனோரின் குடும்பங்கள் மரணச் சான்றிதழையோ இழப்பீட்டையோ எதிர்பார்க்கவில்லை - சர்வதேச மன்னிப்புச்சபை!

பெரும்பாலான உறவுகள் மரணச் சான்றிதழையோ, இழப்பீட்டையோ எதிர்பார்க்கவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பிராந்திய ஆய்வாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான தியாகி ருவன் பத்திரன தெரிவித்தார்.

காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தில் 'காணக்கிடைக்கவில்லை' எனும் சான்றிதழைப் பெற்றுக் கொண்டவர்களின் குடும்ப மீள்வாழ்விற்காக ஒரு முறை மாத்திரம் ஒரு இலட்சம் ரூபாயைச் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அரசாங்கத்தின் குறித்த முடிவு தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், உள்ளக மற்றும் சர்வதேச ரீதியில் அரசாங்கம் ஒன்றுக் கொன்று முரணான கருத்துக்களை வெளியிடுவதாக சுட்டிக்காட்டினார்.

காணாமல் போனோர் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கான குழுக்கள் கடந்த 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது என ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கம் உறுதியளித்ததாக அவர் குற்றம் சாட்டினார். இருப்பினும் காணாமல் போனோரின் பெரும்பாலான குடும்பங்கள் மரண சான்றிதழையோ இழப்பீட்டையோ எதிர்பார்க்கவில்லை என்றும் மாறாக அவர்கள் தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையையே எதிர்பார்க்கின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரையில் காணாமல் போனோர் தொடர்பாக கிடைக்கப் பெற்றிருக்கும் 14 ஆயிரத்து 988 முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகளை முடிவிற்குக் கொண்டு வருவதற்காக 25 விசாரணைக்குழுக்கள் நியமிக்க கடந்த வாரம் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரசுக்கு 10லட்சம் நாங்கள் தருகிறோம்! எங்கள் பிள்ளைகளைத் தாருங்கள்!



அரசுக்கு ஒரு இலட்சம் இல்லை, பத்து மடங்கு பணத்தை நாங்கள் தருகின்றோம். நாம் கையளித்த எமது உறவுகளை தாருங்கள் என முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி ம.ஈஸ்வரி மற்றும் செயலாளர் பி.றஞ்சனா ஆகியோர், 16 மார்ச் 2022 ஊடக சந்திப்பை நடத்தினர். இதில் அவர்கள் கருத்துரைக்கையில், காணாமல் போனோரின் குடும்பங்களின் மீள் வாழ்வுக்காக ஒரு முறை மாத்திரம் செலுத்தப்படும் கொடுப்பனவை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. அரசின் இந்த அறிவிப்புக்கு வலிந்து காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

எங்கள் உயிரின் பெறுமதி ஒரு இலட்சம் என்று தீர்மானிப்பதற்கு இவர்கள் யார்? இவ்வாறு எங்களின் உறவுகளின் பெறுமதியை புரிந்து வைத்திருப்பவர் களுக்கு, இதனை விட பத்து மடங்காக அல்லது இருபது மடங்கு பணத்தை நாம் தருகின்றோம். நாங்கள் அவர் களிடம் கையளித்த உறவுகளை அவர் கள் தேடிக்கண்டறிந்து எங்களிடம் கையளிக்கட்டும்.

அரசாங்கத்தின் காணாமல் போனோர் அலுவலகம் ஊடாக வழங்கப்படும் நட்டஈடு பணத்தையே, மரணச் சான்றிதழையோ, காணவில்லை என்ற சான்றிதழையோ நாங்கள் பெற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. எமது உறவுகளுக்கு சரியான நீதி கிடைக்கும் வரை எங்கள் போராட்டம் தொடரும்" என்றனர்.

இதேவேளை இறுதிப் போரில் நடந்தேறிய போர்க் குற்றங்களுக்கு நீதியை நிலை நாட்டாமல் சர்வதேசத்தின் கோரிக்கைகளையும் புறந்தள்ளி விட்டு, தன்னிச்சையாக செயல்படும் ஓர் அரசாங்கமே இன்று ஆட்சியில் உள்ளதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார். தவக்காலத்தில் ஒவ்வொரு மறைமாவட்ட ஆயர்களும் தங்கள் மறைமாவட்ட மக்களுக்கு தவக்கால திரு மடலை எழுதியுள்ளனர். அந்தவகையில், மன்னார் மறைமாவட்ட ஆயர், மன்னார் மறைமாவட்ட மக்களுக்கு எழுதியுள்ள திருமடலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குக் காரணமானவர்களை கண்டு பிடித்து நீதியை நிலை நாட்ட இலங்கை அரசு தவறியுள்ளது. இதனால், இலங்கை கத்தோலிக்க திருச்சபை, சர்வதேசத்தின் உதவியை நாடவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. ஆட்சியாளர்களின் அசமந்தப் போக்கினால் அனைத்து மக்களும் ஆழ்ந்த அதிருப்தியிலும் ஏமாற்றத்திலும் உள்ளனர் எனவே எல்லா மனிதர்களுக்காகவும் மன்றாடுவோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஒரு தமிழனின் உயிர் ஒரு இலட்சமா? அவமானப்படுத்துகிறது சிங்கள அரசு!

காணாமற் போனோரின் குடும்பத்தினருக்கு ஒரு தடவை மாத்திரம் ஒரு இலட்சம் ரூபாயை வழங்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்திற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் விசனம் தெரிவித்துள்ளார்.



காணாமல் போனோரின் குடும்பங்கள் மரணச் சான்றிதழையோ அல்லது இழப்பீட்டையோ எதிர்பார்க்கவில்லை என்றும் மாறாக அவர்கள் உண்மையையும் நீதியையுமே கோருகின்றார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

ராஜபக்ஷ அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் ஒரு உயிரின் பெறுமதி வெறுமனே ஒரு இலட்சம் ரூபாய் மாத்திரமே என்றும் இது அவமரியாதை செய்யும் வகையிலான மிகமோசமான செயல் என்றும் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த அரசாங்கம் எந்தவொரு தரப்பினரையும் பொறுப்புக்கூறச் செய்வதற்கான நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்றும் மாறாக அவர்கள் உண்மையையும் நீதியையும் குழிதோண்டிப் புதைப்பதற்கே முயற்சிக்கின்றார்கள் என்றும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழநாடு 29வது ஆண்டு விழா
ஒரு மேடையில் இரு நிகழ்வுகள்
ஈழத்து - தமிழக இசை வேந்தர்கள்!
சங்கீத சங்கமம் 2022
07 ஆகஸ்ட் 2022 மாலை 5.00 மணி

நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம்
NAINATIVU CANADIAN DEVELOPMENT SOCIETY
Ontario not for profit corporation No: 1284680
Date of Issue of Letters, Patent: March 1996
80 Nashdene Road, C-70, Toronto Ontario. M1V 5E4

முக்கிய அறிவித்தல்!!!

நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கத்தின் 26ம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் MARCH 19th 2022 சனிக்கிழமை அன்று மாலை 5:30 P.M மணிக்கு சங்கத்தின் தீபம் கலைக்கூட மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். எனவே அனைத்து சங்கத்தின் உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். 2021 க்கான வருட சந்தாவாக $100.00 களை செலுத்தாதவர்கள் அத்தொகையினை பொதுக்கூட்டத்திற்கு முன்னராக செலுத்தி பொதுக்கூட்டத்தில் பங்குபற்றமுடியும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

நன்றிகள்

தொடர்புகளுக்கு:

தலைவர் : கோ.சுபாஸ்சந்திரபோஸ் - 416.473.6305
செயலாளர் : ந.யாகசொரூபன் - 647.896.9448
பொருளாளர்: ச.உமைமாறன் - 647.218.8624
பத்திராதிபர் : மு.ரவீந்திரன் - 416.579.4502

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

12 மார்ச் 2022 முதல் 18 மார்ச் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி றஜிதா வேல்றைதன்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றஜிதா வேல்றைதன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 16 மார்ச் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி றஜிதா வேல்றைதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பேரம்பலம் உதயகுமார்

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பேரம்பலம் உதயகுமார் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 20 மார்ச் 2022 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு பேரம்பலம் உதயகுமார் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சற்குணசிங்கம் ஞானகுணாளன்

சாவகச்சேரி தாமோதரப்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சற்குணசிங்கம் ஞானகுணாளன் அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு நாள் 15 மார்ச் 2021 செவ்வாய்க்கிழமையாகும். ஆகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சற்குணசிங்கம் ஞானகுணாளன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி

நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது 10வது ஆண்டு நினைவு நாள் 14 மார்ச் 2022 திங்கட் கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பத்தினிஅம்மா வைத்தியநாதன்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருவையாறு வட்டக்கச்சி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்தினி அம்மா வைத்தியநாதன் அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவு நாள் 14 மார்ச் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பத்தினிஅம்மா வைத்தியநாதன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்ட வனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 36வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு குகதாஸ் பொன்னம்பலம்

### திரு வைத்தீஸ்வரன் பொன்னம்பலம்



யாழ்.இடைக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களான திரு குகதாஸ் பொன் னம்பலம் திரு வைத்தீஸ்வரன் பொன்னம்பலம் சகோதரர்களுடைய 36வது ஆண்டு நினைவு நாள் 20 மார்ச் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு குகதாஸ், திரு வைத்தீஸ்வரன் ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவஞ்சலிகள்



### திருமதி செல்வநாயகி சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் ஆகியோரது நினைவு நாளையொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் 24 மார்ச் 2022 வியாழக் கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளனர். திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் இணையரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



14 மார்ச் 2022 திங்கட்கிழமை சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி திரேசம்மா அருளானந்தம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக்குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



14 மார்ச் 2022 திங்கட்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, திருவையாறு, வட்டக்கச்சி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்தினிஅம்மா வைத்தியநாதன் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக்குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



14 மார்ச் 2022 திங்கட்கிழமை நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக்குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



15 மார்ச் 2022 செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சற்குணசிங்கம் ஞானகுணாளன் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக்குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



16 மார்ச் 2022 புதன்கிழமை கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றஜிதா வேல்றைதன் அவர்களது 1வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக்குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



16 மார்ச் 2022 புதன்கிழமை அனலைதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சற்குணம் சாம்பசிவம் அவர்களது 15வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக்குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



17 மார்ச் 2022 வியாழக்கிழமை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கைலாயர் இராசரத்தினம் அவர்களது 31ம் நாள் நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## 7வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் தனிஷ் தர்ஷன்

கனடாவில் வசிக்கும் திரு திருமதி தர்ஷன் லவசுதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் தனிஷ் தர்ஷனின் 7வது பிறந்த நன்நாள் 19 மார்ச் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் தனது இல்லத்தில் எளிமையாகப் பிறந்த நன்நாளை கொண்டாடவுள்ள செல்வன் தனிஷ் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்றைய தினம் அன்பு இல்ல க்குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்வுள்ளார். அகவை ஏழ காணும் தனிஷ் பல்கலையும் கற்றுப் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வளர வாழ்த்தும் அவரது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!


Toronto thiruchendur murugan temple

ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்

19 Penn Dr, North York, ON M9L 2A6. 416 744 9568
www.ttmtemple.com - Email: info@ttmtemple.com

ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலய
மகாசபை கூட்டம் பற்றிய அறிவித்தல்

24/02/2022

ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலய நிரந்தர அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருவது.

எமது ஆலய பொதுக்கூட்டம் எதிர் வரும் சித்திரை மாதம் 17/04/2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அன்றைகூட்டத்தில்

- ✔ வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தல்
- ✔ ஆலய அடைமானக்கடனை திரும்ப செலுத்துவற்கான பொறுப்பேற்றல்
- ✔ எதிர் வருங்காலங்களில் புனரமைப்பு பணிகள் பற்றிய கலந்துரையாடல்
- ✔ புதிய நிர்வாகசபை தேர்வு
- ✔ உப நிர்வாகசபை தேர்வு

என்பன இடம் பெறும்

அங்கத்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும் என்பதால் இதுவரை அங்கத்தவர்கள் ஆகாதவர்கள் ஆலய காரியாலயத்தில் தொடர்பு கொண்டு உங்களுடைய பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு**
அங்கத்துவம் தனிநபருக்கானதே தவிர குடும்பத்தினருக்கானது அல்ல ஒரு அங்கத்துவ கட்டணம் தனி ஒரு நபருக்கானதே என்பதனையும் அறியத்தருகின்றோம்

மகாத்மநாதன் கதிர்காமநாதன்
செயலாளர்
ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்

24/02/2022

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759


இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



# Amma Pawn Broker

## அம்மா தங்கநகை அடைவு மாடம்

கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்



Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு

அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

1.0% முதல் 1.5% வரை

அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்

இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்

உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8

ammapawnbroker@gmail.com

416-757-0034

416-994-3861



# TAX CENTRIC

2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph



- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning


## Gayatiri Thavan

Tel: **289.569.0169** • Fax: 289.569.0167

Email: taxcentric@outlook.com

**www.taxcentric.ca**





Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.

Insurance Advisor

Life and Living Benefits

RBC Insurance

WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)

Scarborough, ON M1V 1V2

Mahindan.mailvaganam@rbc.com

Cell: 416-262-4973

Insurance can seems confusing It doesn't have to be.

*We'll help you get it.*

**Talk to an RBC Insurance advisor in your neighbourhood today**

*We take the time to make choosing the right insurance plan less confusing for you. Whether it's life, health, car, home, travel or wealth, we'll help you to choose the right coverage to protect what's important to you.*

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் பெரும்பாலும் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance®

Life | Health | Auto | Home | Travel | Wealth

## உங்கள் சகல மோட்கேஜ் தேவைகளுக்கும் அழையுங்கள்...



* 1st time Home Buyers
* 2nd and 3rd Mortgages
* Refinancing
* Home Equity Line of Credit
* Good Credit/Bad Credit

**NO PROBLEM**

GREATER TORONTO MORTGAGES

**Janaki Jeyathevan**
*(Mortgage Specialist - Lic. No.: M19002242)*

Dir: **647-624-3415**
Email: mortgageapprovalstoday@gmail.com



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# ஜெனிவா 2022

கடந்த ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட ஜெனிவாத் தீர்மானத்தில் ஒரு விடயம் உண்டு. இலங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான சான்றுகளைத் திரட்டும் ஒரு பொறிமுறை உருவாக்கப்படும் என்பதே அது.

அவ்வாறு ஜெனிவா தீர்மானத்தில் அப்பொறிமுறையை இணைப்பதற்காக தொடக்கத்திலிருந்தே உழைத்தது பிரி.எ.ஃப் எனப்படும் பிரித்தானியாவை மையமாகக் கொண்டியங்கும் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பு ஆகும். மியான்மர் மற்றும் சிரியாவில் உருவாக்கப்பட்ட பொறிமுறைகள மனதில் வைத்து பிரிஎப் உழைத்திருந்தாலும் தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டது அப்படிப்பட்ட ஒரு பொறிமுறை அல்ல என்ற ஒரு விமர்சனம் உண்டு.

மேலும் அது கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதி தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மூன்று கட்சிகள் இணைந்து ஐநாவுக்கு வரைந்த ஒரு கடிதத்தில் கேட்டிருந்தது போன்ற ஒரு பொறிமுறையும் அல்ல.

எனினும் அப் பொறிமுறையானது சான்றுகளை திரட்டுவதற்கான ஒரு கட்டமைப்பாக இயங்கும் என்று கூறப்பட்டது. கூட்டமைப்பு அதை ஒரு முக்கிய அடைவாகக் காட்டியது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நிகழ்ந்த ஐநா கூட்டத் தொடரில் தனது வாய் மூல அறிக்கையில் மனித உரிமைகள் ஆணையாளர் மேற்படி பொறிமுறையானது கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து செயற்படத் தொடங்கும் என்று குறிப்பிட்டிருந்தார்.

அது ஒரு பொறிமுறை என்று அழைக்கப்பட மாட்டாது என்றும் சான்றுகளை திரட்டுவதற்கான செயலகம் என்றே அழைக்கப்படும் என்றும் ஒரு தகவல் வந்தது. அப் பொறிமுறைக்குள் மொத்தம் 12 உறுப்பினர்கள் இருப்பார்கள் என்றும் கடந்த ஆண்டு கடைசி மூன்று மாதங்களும் இந்த ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களுமாகச் சேர்த்து மொத்தம் ஒரு ஆண்டு கால கட்டத்திற்குரிய நிதி அதற்கு ஒதுக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

அதற்கு வேண்டிய நிதியை ஒதுக்குவதற்கு சில நாடுகள் முன் வந்ததாகவும் தெரியவருகிறது. எனினும் சீனா பாகிஸ்தான் போன்ற இலங்கைக்கு ஆதரவான நாடுகள் அப்பொறிமுறைக்குரிய நிதியை குறிப்பிட்ட சில நாடுகளிடமிருந்து விசேஷ நிதியாக சேகரிப்பதை எதிர்த்ததாகத் தெரிகிறது. பதிலாக ஐநாவின் பொது நிதி ஒதுக்கீட்டிற்கூடாக அந்த நிதி வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதாக தெரிய வருகிறது.

ஐநா மன்றம் வளம் பொருந்திய நாடுகளின் நிதியில் தங்கியிருக்கிறது. போதிய நிதி ஐநாவுக்கு கிடைப்பதில்லை. அதிலும் குறிப்பாக ஐநா மனித உரிமைகள் ஆணையத்துக்குரிய நிதிப்பற்றாக்குறை உண்டு. இலங்கைத் தீவின் வட பகுதியில் கிளிநொச்சியிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் இயங்கும் இரண்டு யுனிசெப் காரியாலயங்கள் அவற்றின் நடவடிக்கைகளை இந்த ஆண்டு டிசம்பர் மாதத்தோடு குறைந்தளவு அலுவலர்களோடு மட்டுப்படுத்துகின்றன என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

இது ஐநாவுக்குள்ள நிதி நெருக்கடி காரணமாக என்ற ஒரு வாதம் உண்டு. அதே சமயம் இலங்கைத் தீவு நடுத்தர வருமானத்துக்குரிய ஒரு நாடாக வளர்ச்சியடைந்து விட்டதால் மேற்படி அலுவலகங்கள் அவற்றின் செயற்பாடுகளை குறைத்து கொள்கின்றன என்று ஒரு விளக்கமும் உண்டு. இலங்கைத் தீவு தொடர்பான ஐநா மனித உரிமைகள் ஆணையத்தின் இந்த ஆண்டுக்குரிய அறிக்கையில் நிதி நெருக்கடி பற்றிச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. சான்றுகளைத் திரட்டும் பொறிமுறையின் செயற்பாடுகள் நிதி போதாமையால் கட்டுப்படுத்தப்படுவதாக அறிக்கை கூறுகிறது.



இவ்வாறானதொரு பின்னணியில் மேற்படி சான்றுகளைத் திரட்டும் பொறிமுறையை ஐநாவின் பொதுவான நிதி ஒதுக்கீட்டின் கீழ் கொண்டு வந்ததன் மூலம் இலங்கைக்கு ஆதரவான நாடுகள் பொறிமுறைக்கு வழங்கப்படும் நிதியை திட்டமிட்டுக் குறைத்து விட்டதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

தொடக்கத்தில் 12 உறுப்பினர்களைக் கொண்ட பொறிமுறைக்கு 2.8மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்போது கிட்டத்தட்ட ஒரு மில்லியன் டொலர்தான் ஒதுக்கப்படும் என்று தெரிய வருகிறது. இதனால் அப் பொறிமுறையின் பருமனும் கனதியும் குறைக்கப்பட்டு விட்டன. இப்போது வழங்கப்படும் நிதியின்படி மொத்தம் 8 உறுப்பினர்களை கொண்ட ஒரு கட்டமைப்பாக அது இயங்கும். அதில் இதுவரை ஐந்து நிபுணர்கள் நியமிக்கப்பட்டு விடடார்கள். மேலும் இப்பொறிமுறையானது இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து வரும் செப்டம்பர் மாதம் வரையிலும் இயங்கும். அதாவது அதன் செயற்பாட்டுக் காலம் ஆறு மாதங்களாக குறைக்கப்பட்டிருப்பதாக அறிய முடிகிறது. இது தொடர்பில் ஐநா வட்டாரங்களை மேற்கோள் காட்ட முடியவில்லை.

கடந்த ஆண்டு மார்ச் மாத கூட்டத் தொடரை முன்னிட்டு தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மூன்று கட்சிகளை ஒருங்கிணைத்த பொழுது மேற்படி சான்றுகளை திரட்டும் பொறிமுறையை அதிகம் வலியுறுத்தி கூறியது விக்னேஸ்வரனின் கூட்டணியைச் சேர்ந்த சிவாஜிலிங்கம் தான். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அந்த கோரிக்கையின்பால் அதிகம் அக்கறை காட்டவில்லை. கிளிநொச்சியில் நடந்த மூன்றாவது சந்திப்பின் போது அக்கோரிக்கையை கஜேந்திரகுமார் நிபந்தனையோடு ஏற்றுக் கொண்டார். குறிப்பிட்ட பொறிமுறைக்குரிய காலகட்டம் ஆறு மாதங்களாக குறைக்கப்பட வேண்டும் என்பதே அந்த நிபந்தனையாகும்

இப்பொழுது அப்பொறிமுறைக்குரிய காலகட்டம் ஆறு மாதங்களாக குறுகப்பட்டிருக்கிறது. ஆனால் இது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேட்ட ஆறு மாதங்கள் அல்ல. மாறாக அப்பொறிமுறையின் வீரியம் குறைக்கப்பட்டதால் குறுக்கப்பட்ட அதன் ஆயுட்காலம் தான் அது.

அதாவது அக்கூட்டுக் கடிதத்தில் கேட்கப்பட்டது போன்ற ஒரு பொறிமுறை உருவாக்கப்படவில்லை. இது முதலாவது. இரண்டாவதாக ஐநா மனித உரிமைகள் ஆணையர் கூறியது போல கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து அது இயங்கத் தொடங்கவில்லை. அது வரும் ஏப்ரல் மாதத்தில் இருந்து தான் இயங்க போகிறது. மூன்றாவதாக அப் பொறிமுறையானது முன்பு கூறப்பட்டது போல 12 உறுப்பினர்களைக் கொண்டதாக அமையவில்லை. இப்பொழுது அதில் மொத்தம் எட்டு உறுப்பினர்கள் இருப்பார்கள்.

தமிழ் மக்கள் மத்தியிலும் தமிழ் ஊடகங்கள் மத்தியிலும் அப்பொறிமுறை குறித்து போதிய விளக்கங்களும் இல்லை. ஆர்வமும் இல்லை. அது தொடர்பாக தெளிவற்ற தகவல்களே கடந்த ஓராண்டு முழுவதும் உலவி வருகின்றன. கடந்த ஐநா தீர்மானத்தில் அப்பொறிமுறை அறிவிக்கப்பட்டதிலிருந்தே அது தொடர்பில் குழப்பமான ஊர்ஜிதமற்ற தகவல்கள் தான் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன.

தமிழ்த் தரப்பு கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக ஐநாவை ஓரணியாக அணுகவில்லை. ஒரே கட்டமைப்பின் ஊடாக அணுகவில்லை.ஒரு பொதுக் கட்டமைப்போ பொதுப் பொறிமுறையோ இல்லை

பிரித்தானியாவில் உள்ள பி.ரி.எ.ஃப் போன்ற சில அமைப்புகள் ஐநாவுடன் நெருக்கமாக செயல்படுவதாகத் தெரிகிறது. அதேசமயம் ஜெனீவாவை மையமாகக் கொண்டு ஒரு தமிழ் அமைப்பும் செயற்படுகின்றது. இவை தவிர தாயகத்திலுள்ள கட்சிகளும் ஐநாவுடன் தொடர்பில் உள்ளன. இதில் சம்பந்தப்பட்ட தாயகம் மற்றும் புலம்பெயர்ந்த தரப்பில் உள்ள அமைப்புகளுக்கிடையே ஒருங்கிணைப்பு கிடையாது.ஒருவர் மற்றவரை அங்கீகரிக்கும் நிலைமையும் இல்லை. ஒருவர் மற்றவரை அனுசரித்து ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் இணைந்து செயற்படும் நிலைமையும் இல்லை. அவ்வாறு இம்மூன்று தரப்புகளையும் இணைத்து இயக்குவதற்கு பொருத்தமான தலைமைகளும் இல்லை.

ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரை அவர்கள் ஒரே குரலில் ஒரே கட்டமைப்பாக இயங்குகிறார்கள்.அவர்களிடம் ஒரு பொதுவான வேலைத்திட்டம் உண்டு. ஒரு பொதுவான நிகழ்ச்சி நிரல் உண்டு. முழு வளத்தையும் ஒரு மையத்தை நோக்கி அவர்கள் குவிக்கிறார்கள்.

இம்முறை ஜெனிவா கூட்டத் தொடருக்கு தமிழ் மக்கள் பக்கமிருந்து யாரும் போகவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பின் உயர்மட்டத்துக்கும் ஐநாவுக்கும் இடையே உரையாடல்கள் உண்டு. அது தவிர ஐநாவுக்கு கூட்டாக கடிதம் எழுதிய ஐந்து கட்சிகளின் கூட்டுக்கும் ஐநா மனித உரிமைகள் ஆணையகத்தின் சேர்ந்த சில அதிகாரிகளுக்கும் இடையே கடந்த வாரம் ஒரு சூம் சந்திப்பு இடம் பெற்றதாக கூறப்படுகிறது. இவை தவிர தமிழ்த் தரப்பில் இருந்து யாரும் இம்முறை ஐநாவுக்கு போகவில்லை.

மேலும் ஜெனிவாவில் வழமையாக நடப்பதைப் போல பக்க நிகழ்வுகளும் இம்முறை அதிக தொகையில் இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. கடந்த ஆண்டு 17 பக்க நிகழ்வுகள் இடம் பெற்றதாகவும் இந்த ஆண்டு அதை விடக் குறைவாகவே இடம் பெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. நிதி உதவி வழங்குனர்களின் தொகை குறைந்தமை ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இம்முறை ஒருவித சோர்வான சூழ்நிலை காணப்படுவதாக செயற்பாட்டாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

ஆனால் அரசுத் தரப்பிலிருந்து ஒரு பலமான தூதுக்குழு சென்றிருக்கிறது. அங்கே அவர்கள் மேற்சொன்ன பொறிமுறையை திட்டவட்டமாக நிராகரித்திருக்கிறார்கள். அப்பொறி முறை எப்படிப்பட்டது?அதன் உள்ளடக்கம் எப்படிப்பட்டது? அது எவ்வளவு காலத்துக்கு இயங்கும்? இப்பொழுது பொறிமுறையின் நிலை என்ன? போன்ற கேள்விகளுக்கு தமிழ் மக்கள் மத்தியில் விளக்கங்கள் இல்லை. ஆனால் அப் பொறி முறையை இல்லாமல் செய்யும் முனைப்போடு அரசாங்கம் திட்டமிட்டு தனது வளங்கள் அனைத்தையும் திரட்டிச் செயல்படுகிறது. மேலும் ஜெனிவா கூட்டத் தொடருக்கு சென்ற அரசு தூதுக்குழு நாடு திரும்பிய கையோடு ஒரு அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன்படி நிலைமாறுகால நீதிக்குரிய அலுவலகங்களான காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் இழப்பீடு நீதிக்கான அலுவலகம் ஆகிய இரண்டுக்கும் 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது.

அதாவது அரசாங்கம் ஜெனிவாவைக் கையாள முடியும் என்ற நம்பிக்கையோடு உழைக்கிறது என்று பொருள். சான்றுகளைத் திரட்டுவதற்கான பொறிமுறையின் வீரியம் குறைக்கப்பட்டமையானது அந்த நம்பிக்கையைப் பலப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளலாமா?



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழநாடு 29வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2022
07 ஆகஸ்ட் 2022

# உயிர்த்தெழுமா அ.தி.மு.க?

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
- குடந்தையான் -



அண்மையில் நிறைவடைந்த நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் "வலிமையான எதிர்க்கட்சி" என்று பறைசாற்றிக் கொண்டிருக்கும் அ.தி.மு.க., ஒரு மாநகராட்சியில் கூட வெற்றி பெறாமல் படுதோல்வியை சந்தித்திருக்கிறது. இதனால் கட்சியின் "இரட்டை தலைமை" மீது தொண்டர்களும் இரண்டாம் நிலை மற்றும் கடைநிலை நிர்வாகிகளும் கடும் கோபத்திலும் அதிருப்தியிலும் இருக்கிறார்கள்.

அ.தி.மு.க. கட்சி ஆரம்பிக்கப்பட்டதில் ஆளும் கட்சியாகவே அதிக ஆண்டுகள் அக்கட்சி பயணித்திருக்கிறது. அவ்வாறிருக்க முதன் முறையாக கட்சியின் நிரந்தர நட்சத்திர தலைமையான புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி ஜெயலலிதா ஆகியோர் மறைவிற்குப் பிறகு தொண்டர்கள் மற்றும் மக்கள் விரும்பும் "ஒற்றை தலைமை" உருவாகாததே அ.தி.மு.க.வின் தற்போதைய பின்னடைவிற்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா இல்லாத தற்போதைய சூழலை பயன்படுத்திக் கொண்டு அ.தி.மு.க.வில் எடப்பாடி பழனிச்சாமி, பன்னீர்செல்வம், சசிகலா ஆகிய மூவரில் யார் ஒற்றை தலைமையாக உருவெடுக்கலாம் என்ற போட்டிகள் இல்லாமில்லை. மூவரும் ஏதேனும் ஒரு வகையில் சமரச உடன்பாட்டை மறைமுகமாக மேற்கொண்டு கட்சியை வழிநடத்தினால் அது அ.தி.மு.க. எதிர்காலத்தில் நம்பிக்கையுடன் மக்களின் விருப்பத்திற்குரிய அரசியல் கட்சியாக இயங்குவதற்கு வழிசமைக்கும்

ஆனால் இந்த மூவரும் ஒருவருக்கொருவர் குறை குற்றம் கண்டு வெளிப்படுத்திக் கொண்டுள்ளதால் அ.தி.மு.க. தொடர்ந்து சரிவை சந்தித்து சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்துவிட்டாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

அ.தி.மு.க.வின் தோல்வி குறித்து மனம் திறந்த சுயபரிசோதனைக்கு தற்போதைய இரட்டைத் தலைமையிலான அக்கட்சியினர் தயாராக இல்லை என்பது பட்டவர்த்தனமாக தெரியவருகிறது. அதிகார அரசியலில் எடப்பாடி தொடர்ந்து முன்னேறிக் கொண்டு வருகிறார். இவரது இலக்கை நோக்கிய பயணத்தில் சசிகலா மூலம் அவ்வப்போது இடையூறையும் தடையும் ஏற்படுத்தி வருகிறார் பன்னீர்செல்வம்.

அண்மையில் கூட தேனி மாவட்ட நிர்வாகிகளை சசிகலாவிற்கு ஆதரவாக தீர்மானம் இயற்ற வைத்து அரசியல் ஆட்டத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறார் பன்னீர்செல்வம். இதனிடையே பன்னீர்செல்வத்தின் அரசியலை நன்கு தெரிந்து வைத்திருக்கும் எடப்பாடி அதனை அவருடைய பாணியிலேயே எதிர் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அ.தி.மு.க. செல்வாக்கை இழந்து கொண்டிருக்கிறது என்று வருத்தப்படும் கட்சியின் மூத்த தொண்டர்கள் "எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதாவின் காலகட்டத்தில் திராவிட இயக்கத்தின் திராவிட பாரம்பரியத்தின் நீட்சியாக கருதப்பட்ட அ.தி.மு.கவை ஜெயலலிதாவின் மறைவிற்குப் பிறகு மத்தியில் ஆளும் கட்சியாக இருந்த பா.ஜ.க.வுடன் உறவும் கூட்டணியும் வைத்துக் கொண்டு தன் சுய அடையாளத்தை இழந்து விட்டது. உறவு மற்றும் கூட்டணி என்ற இரட்டை வலிமையுடன் வலம் வந்த பா.ஜ.க., அ.தி.மு.க. மீது அரசியல் ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் ஆதிக்கம் செலுத்தி அ.தி.மு.கவை அடிமை அரசியல் பாதையில் பயணிக்க வைத்தது" என்று குறிப்பிடுகிறார்கள்.

நாடாளுமன்ற தேர்தல் சட்டப்பேரவைத் தேர்தல் தோல்விக்குப் பிறகும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் ஆகியவற்றில் கிடைத்த படுதோல்விக்கு பிறகு இவ்விடயத்தை அ.தி.மு.க.வின் அடிமட்ட தொண்டர்கள் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். இதனை இரட்டைதலைமை உணர மறுத்து மாற்றுப் பாதையை தெரிவு செய்யாமல் தொடர்ந்து அடிமை அரசியலில் பயணிப்பதைதான் தொண்டர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இதனால் அ.தி.மு.க.வினை கைவிட்டு பா.ஜ.க. வுடன் கைலாகு கொடுப்பதற்கு பல தொண்டர்கள் தயாராகி விட்டனர்.

அ.தி.மு.க.வின் தோல்விக்கு "மாநில உரிமைகள் பறிக்கப்படுவதை அ.தி.மு.க. ஆட்சியின் போது உறுதியாக எதிர்க்க முடியவில்லை. நீட் தேர்வை எதிர்க்க முடியவில்லை. உள்ளாட்சித் தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிட்ட அதிருப்தி வேட்பாளர்கள், பா.ஜ.க. கட்சியில் இணைந்து தாமரை சின்னத்தில் போட்டியிட்டதை எதிர்க்க முடியவில்லை." என்று பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. தி.மு.க. ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த பிறகு பன்னீர்செல்வம் தி.மு.க. தலைமையிடம் மறைமுக சமரச அரசியலை சாமர்த்தியமாக செய்து வருகிறார். தொடக்கத்தில் தீவிர தி.மு.க. எதிர்ப்பு நிலையை கடைப்பிடித்த எடப்பாடி கொடநாடு கொலை, கொள்ளை விவகாரத்திற்குப் பிறகு தன்னுடைய தீவிர எதிர்ப்புத் தன்மையில் இருந்து விலகி அவரும் உடன்பாட்டு அரசியலுக்கு மறைமுகமாக ஆதரவு தெரிவித்து வருகிறார்.

பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி ஆகிய இருவரும் கட்சியின் மூத்தநிர்வாகிகள் விடயத்தில் பாகுபாட்டையும் பிரிவினையையும் காட்டி வருவதையும் ஏற்க மறுக்கிறார்கள். குறிப்பாக ராஜேந்திர பாலாஜி மற்றும் ஜெயக்குமார் கைது விவகாரத்தில் இரட்டைத் தலைமை பாகுபாடு காட்டி வருகின்றமையும் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியதாகின்றது.

ஒற்றை தலைமையாக வர வேண்டுமென பெருவிருப்பம் கொண்ட எடப்பாடி இது தொடர்பாக சசிகலா மற்றும் பன்னீர்செல்வத்தை அரவணைத்து செல்லாமல் அதிகாரத்தில் தனக்கு கீழ்படிய வேண்டும் என்ற எண்ணவோட்டத்துடன் செயல்படுவதால் அவரால் ஒற்றை தலைமையை நோக்கி செல்ல முடியவில்லை. வேறு சிலர் சசிகலாவை கடுமையான நிபந்தனைகளை விதித்து அ.தி.மு.க.வில் மீண்டும் இணைத்துக் கொள்ள வேண்டும். அவருடைய தலைமையில் கட்சி செயல்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

மேலும் சிலர் "சசிகலா அ.தி.மு.க.வில் இணைத்துக் கொள்ளப்பட்ட பிறகும் தமிழகத்தில் அ.தி.மு.க., பா.ஜ.க.வின் முகமாகவே தொடர்ந்து செயற்படும். ஏனெனில் சசிகலா மீதும் தினகரன் மீதும் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இதன் காரணமாக தற்போது இரட்டை தலைமை எவ்வாறு பா.ஜ.க.விற்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொள்ளாமல் அரசியல் செய்து கட்சியை நடத்தி வருகிறார்களோ அதேபோன்ற ஒரு நிலைதான் சசிகலாவிற்கு ஏற்படும். அதனால் அவர் தேவையில்லை என்று விளக்கமளிக்கின்றார்கள்.

அதே தருணத்தில் அ.ம.மு.க. கட்சி, மக்களவைத் தேர்தல், சட்டப்பேரவை தேர்தல், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் என்று அனைத்து தேர்தலில் போட்டியிட்டு இரண்டு சதவீதத்திற்கும் மேலான வாக்குகளைப் பெற்றிருப்பதால் அக்கட்சியை கூட்டணியில் இணைத்துக் கொண்டால் அ.தி.மு.க. வலிமைப் பெறும் என்று தேர்தல் வியூக நிபுணர்கள் கள ஆய்வு செய்து குறிப்பிடுகின்றார்கள்.

இப்படி பல்வேறு விடயங்களை குறிப்பிடும் அ.தி.மு.க.வினர் "கட்சி மீண்டும் உயிர்த்தெழ வேண்டும் என்றால் பா.ஜ.க.விற்கு எதிரான நிலைப்பாட்டை திமுகவை போல் அதிமுகவும் உறுதியாக பின்பற்ற வேண்டும். தற்போது அ.தி.மு.க.வின் தலைமை குறித்த விவகாரத்தில் மாவட்ட செயலாளர்களின் ஆதிக்கத்தை குறைத்துக் கொண்டு ஓ.பி. எஸ்., ஈ.பி.எஸ்.ஸ்ரீ சசிகலா என மூவரும் ஒன்றிணைந்து தங்களுக்குள் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு ஒற்றைத் தலைமையுடன் கட்சியை வழிநடத்தினால், தி.மு.க. முன்மொழிந்து கவனத்தில் கொண்டு வந்திருக்கும் திராவிடவியல் கோட்பாட்டில் அ.தி.மு.க.வும் தன் பங்களிப்பை சிறப்பாக தொடர இயலும். இதனை ஏற்க மறுத்து அதிகார அரசியல் அடிமை அரசியல் ஆகிய வற்றில் நாட்டம் கொண்டு செயல்பட்டால் அ.தி.மு.க. தொடர்ந்து சரிவை சந்திக்கும் என்பது உறுதி" என்று அக்கட்சியின் சகல மட்ட உறுப்பினர்கள் தெரிவிப்பதை இரட்டை தலைமையும் ஒற்றைத் தலைமைக்கு ஆசைப்பட்டு பயணித்துக் கொண்டிருப்பவர்களும் உணர்ந்து செயற்பட வேண்டும். இந்த கோணத்தில் செயல்பட்டால் அ.தி. மு.க. வரும் தேர்தலில் மக்களின் நம்பிக்கையைப் பெற்று உயிர்த்தெழும்.



# இலங்கை மீதான சர்வதேச அவதானம் உண்மையும் கற்பனையும்

உலகலாவிய புவிசார் அரசியல் போட்டியில் இலங்கை ஒரு முக்கிய விடயமாக நோக்கப்படுவதான ஒரு கதை நம்மவர்கள் மத்தியிலுண்டு. ஒரு குறிப்பிட்ட தரப்பினர் இப்படியான பார்வைகளை முன் வைத்து வருகின்றனர். குறிப்பாக சீனாவின் பிரசன்னம் இலங்கைத்தீவில் அதிகரித்து வருவதாகவும் இதனால் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு நெருக்கடியிருப்பதாகவும் இவர்கள் கூறுவதுண்டு. இன்னொரு தரப்பினரோ சற்று ஒரு படி மேல் சென்று இந்தச் சூழலை கையாளுவதற்கு வேறு வழியின்றி இந்தியா ஈழத்தமிழர்களை நோக்கி வர வேண்டி வரும் என்றவாறு கற்பனை செய்வதுமுண்டு. இவ்வாறான பார்வைகளுக்கு அமைவாகத் தான் விடயங்கள் இடம் பெறுகின்றனவா?

அமெரிக்க தேசிய புலனாய்வு பணியகத்தின் இந்த ஆண்டுக்கான உலகளாவிய அச்சுறுத்தல் தொடர்பான அறிக்கை வெளியாகியிருக்கின்றது. அமெரிக்க அவதானத்தில் உலகளவிலான அச்சுறுத்தல்கள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. இதில் முதலாவது அச்சுறுத்தலாக சீனா குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இரண்டாவதாக ரஷ்யாவும் மூன்றாவதாக ஈரானும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தெற்காசியாவின் அச்சுறுத்தல்கள் தொடர்பிலும் குறித்த அறிக்கையில் ஆராயப்பட்டிருக்கின்றது. தெற்காசியாவின் அச்சுறுத்தல்களாக ஆப்கானிஸ்தான் விவகாரம் முதலாவதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இரண்டாவதாக பாகிஸ்தானிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான பிரச்சினை சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

மூன்றாவதாக இந்திய சீன எல்லைப்புற இராணுவ நெருக்கடிகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது தவிர தெற்காசியாவில் உள்ள வேறு எந்தவொரு நாடுகள் தொடர்பிலும் குறிப்பிடப்படவில்லை. ஏனெனில் தெற்காசியாவிலுள்ள இலங்கை உட்பட சிறிய நாடுகள் அமெரிக்க அவதானத்திலேயே இல்லை.

இதிலிருந்து ஒரு விடயம் வெள்ளிடமலை. அதாவது இந்தியா — பாகிஸ்தான் முரண்பாடுகளின் வழியாகவும் இந்திய — சீன பதற்றங்களின் வழியாகவும் தான் தெற்காசியாவை அமெரிக்கா உற்று நோக்குகின்றது. தெற்காசியா தொடர்பான அமெரிக்க புரிதலும் அணுகுமுறையும் இந்தியாவை அடிப்படையாகக் கொண்டதென்பது தெளிவாகின்றது.

தெற்காசியாவில் உள்ள நாடுகள் இந்தியாவுடன் ஏற்படுத்திக் கொள்ளும் உறவு மற்றும் முரண்பாடுகளின் அடிப்படையில் தான் தெற்காசியாவின் உலக முக்கியத்துவம் தீர்மானிக்கப்படும். அந்த பின் புலத்தில் நோக்கினால் அமெரிக்காவின் தெற்காசிய கொள்கை முடிவுகள் அனைத்தும் புதுடில்லியின் முடிவுகளின் அடிப்படையில் தான் அமைந்திருக்கும். புதுடில்லியின் தீர்மானங்களுக்கு அப்பால் சென்று செயற்படுமளவிற்கு அமெரிக்க மூலோபாய சமூகத்திற்கு எந்தவொரு அவசியமும் இல்லை. தெற்காசியாவில் இந்தியாவின் முடிவுகளே பிரதானமானது. இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால் இலங்கை



விடயத்தில் அமெரிக்க ஈடுபாட்டின் எல்லைக்கோடு என்பது எப்போதுமே இந்தியாவின் ஆர்வங்களுக்கு அமைவாகவே அமைந்திருக்கும். இந்தியாவின் அனைத்து அணுகுமுறைகளும் அமெரிக்காவிற்கு உகந்ததல்ல என்பது உண்மை தான். உதாரணமாக ரஷ்ய — உக்ரைன் யுத்தத்தின் போது முழு மேற்குலகும் ரஷ்யாவிற்கு எதிராகவே திரும்பியது. ஆனால் இந்தியா மேற்குலகத்தின் தீர்மானங்களுக்கு ஒத்துழைக்கவில்லை. ரஷ்யாவிற்கு எதிராக ஐ.நா பாதுகாப்பு சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது இந்தியா அதில் பங்குகொள்ளவில்லை. ஏனெனில் இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் நெருங்கிய நட்புறவுண்டு. ரஷ்யாவுடன் நிற்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு உண்டு.

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் முரண்பாடுகள் இருந்தாலும் கூட ரஷ்ய விடயத்தில் இந்தியாவும் சீனாவும் அவரவர் நலன்களின் அடிப்படையில் ஒரு புள்ளியில் தான் நின்றனர். சர்வதேச அரசியலிலுள்ள சிக்கலான பக்கம் இது தான். ஏனெனில் இங்கு அனைத்துமே நலன்களின் அடிப்படையில் தான் நிறுத்துப் பார்க்கப்படுகின்றது. நீதியின், நியாயத்தின், தர்மத்தின் அடிப்படையில் இங்கு எதுவும் நோக்கப்படுவதில்லை. நோக்கவும் முடியாது. எனவே சர்வதேச அரசியல் தொடர்பில் கற்பனை செய்வதை விடுத்து அதனை இரத்தமும் சதையுமாக புரிந்த கொள்வதே அவசியமானது. இலங்கையின் ஆட்சியாளர்கள் தொடர்பில் இந்தியா அறியாத விடயங்கள் எதுவுமில்லை. இந்தியாவை பொறுத்த வரையில் இலங்கை விடயத்தில் சிங்களவர் ஈழத்தமிழர் ஆகிய இரண்டு இனக் கூட்டத்திடமிருந்தும் அவமானகரமான அனுபவங்கள் கிடைத்திருக்கின்றன. இலங்கை தொடர்பில் ஒவ்வொரு முடிவுகளை எடுக்கும் போதும் இந்திய இராஜதந்திர சமூகம் இதனை கருத்தில் கொள்ளும். எனவே இந்தியாவிற்கு புதிதாக கதைகள் சொல்வதாக எவரேனும் நினைத்துக் கொண்டால் அது தவறானது.

உலகில் எந்தவொரு நாடும் அதன் நலன்களை நிறுத்துப் பார்த்துத் தான் வெளிநாட்டு உறவுகளை தீர்மானிக்கும். இந்தியாவின் தலையீடும் அதன் நலன்களில் இருந்து தான் தீர்மானிக்கப்பட்டது. அன்றிருந்த அரசியல் சூழ்நிலைகளினால் அவ்வாறான முடிவுகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்தியாவிற்கு ஏற்பட்டது. தனிநாட்டு கோரிக்கையை இந்தியா ஏற்றுக் கொள்ளா விட்டாலும் இந்தியாவில் இருப்பது போன்றதொரு நியாயமான தீர்வை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதில் இந்தியா அக்கறையுடன் இருந்தது. ஆனால் இந்தியாவுடன் இணைந்து பயணிக்க விடுதலைப் புலிகள் இயக்கம் உடன்படவில்லை. பிரபாகரன் இந்தியாவிற்கு எதிரான பார்வையில் பயணித்தார். ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவிற்கும் இடையிலான பலமான நட்புறவு பாதிக்கப்பட்டது. இப்போது நட்பு அறிந்திருக்கும் சூழலில் தான் தமிழ்க் கட்சிகள் இந்தியாவின் தயவை, தலையீட்டை கோருகின்றன.

ஆனால் இது எழுதுவது போன்று பேசுவது போன்று இலகுவானதொரு விடயமல்ல. ஏனெனில் அரசியல் சூழ்நிலைகள் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இலங்கை தொடர்பான இந்தியாவின் பார்வைகள் கணிசமாக மாறி விட்டது. இந்த நிலையில் இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் எச்சமாக இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை வலியுறுத்தக்கூடிய நிலையில் தான் இந்தியாவின் ஈடுபாடு மட்டுப்பட்டுள்ளது.

ஏனெனில் இந்தியா ஒரு பிராந்திய சக்தி. இந்தியாவிற்கு உள்ளுக்குள்ளும் எல்லைகளிலும் அயல்நாடுகளிலும் ஏராளமான பிரச்சினைகள் உண்டு. இந்த ஏராளமான பிரச்சினைகளில் இலங்கையும் ஒன்று. ஆனால் தனது உடனடி அயல்நாடு எனும் வகையில் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் ஆற்றலை இந்தியா கொண்டிருப்பது உண்மை. ஆனால் அதற்காக எழுந்தமானமாக முடிவுகளை இந்தியா எடுக்கப் போவதில்லை. ஏற்கனவே விரல்களை சுட்டுக் கொண்ட அனுபவத்திலிருக்கும் இந்தியா ஒவ்வொரு விடயங்களையும் நிறுத்துப் பார்த்துத் தான் விடயங்களை முன்னெடுக்கும் வாய்ப்புள்ளது.

இந்த பின்புலத்தில் சிந்தித்தால் இலங்கையின் மீதான சர்வதேச அவதானம் என்பது இந்தியாவை தாண்டிச் செல்லக் கூடிய ஒன்றாக எப்போதுமே இருக்கப் போவதில்லை. நான் இங்கு சுட்டிக் காட்டும் அமெரிக்க புலனாய்வு அறிக்கை அதற்கொரு தெளிவான சான்று. அதாவது மேற்குலகத்தின் தெற்காசியா தொடர்பான எந்தவொரு தீர்மானமும் இந்தியாவை அனுசரித்து செல்வதாகவே இருக்கும். அதே போன்று இந்தியாவின் தீர்மானங்கள் கருத்துக்களே உலக அரங்கில் உற்று நோக்கப்படும். ஏனெனில் உலக அரசியல் போக்கில் இந்தியாவிற்கு ஒரு பிரதான இடமுண்டு. குறிப்பாக அமெரிக்காவை பொறுத்த வரையில் அதன்


கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -




முதன்மையான அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு இந்தியாவின் ஆதரவும் ஒத்துழைப்பும் கட்டாயமானது.

அதே போன்று இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் எழுச்சியை ஒரு எல்லைக்குள் முடக்குவதற்கு அமெரிக்காவின் ஒத்தாசை இந்தியாவிற்கு தேவை. இந்தியா அமெரிக்காவுடனான சுதந்திர பாதுகாப்பு உடன்பாட்டை கொண்டிருக்கின்றன.

அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியாவின் கடல்வழியை, இந்தியாவின் படைத் தளங்களை அமெரிக்கா பயன்படுத்த முடியும். அதே போன்று பிரித்தானியாவுடன் இந்தியா சுதந்திர பாதுகாப்பு உடன்பாட்டை கொண்டிருக்கின்றது. இவ்வாறான உடன்பாடுகளும் நட்புறவும் இருந்தாலும் கூட இந்தியா உலக விடயங்களில் முற்றிலுமாக அமெரிக்காவுடன் இல்லை.

இந்தியா இப்போதும் நேரு கால அணிசாரா கொள்கைப் பாரம்பரியத்தின் அடிப்படையிலேயே அதன் வெளியுறவுகளை தீர்மானிக்கின்றது. இந்தியாவில் எவர் ஆட்சியில் இருந்தாலும் இது தான் இந்தியாவின் வெளிவிவகார கொள்கையின் அஸ்திபாரம்.

அணுகு முறைகள் வேண்டுமானால் மாறலாம். ஆனால் அடிப்படை ஒன்று தான். எனவே சீனாவின் பிரசன்னத்தின் அடிப்படையில் இலங்கையின் மீது அமெரிக்காவும் இந்தியாவும் பெருமளவில் பதற்றமடைந்து இருப்பதாக கற்பனை செய்வது அர்த்த மற்ற ஒன்று.

அதேவேளை இந்தியா வேறு வழியில்லாமல் ஈழத்தமிழர்களை நோக்கி வரும் என்றவாறு கற்பனை செய்தால் அது ஒருவரின் அரசியல் கத்துக்குட்டித்தனமாகவே இருக்க முடியும். அவ்வாறானவர்கள் தங்களுக்குள் இப்படியானதொரு கேள்வியை கேட்டுக் கொள்வது நல்லது.

அதாவது சிங்களவர்கள் இந்தியாவிற்கு தேவையான அனைத்தையும் செய்து கொடுத்து சராணாகதியடைந்தால் ஈழத்தமிழர்கள் விடயத்தை இந்தியா கை விடலாம் தானே! ஒருவேளை அப்படி நடந்தால் ஈழத்தமிழர்களின் அரசியல் தீர்விற்காக பேசுகின்ற ஒரே ஒரு நாடான இந்தியாவும் கூட ஈழத்தமிழர்களுக்கு இல்லையென்றாகலாம். ஆனால் அவ்வாறு நடக்காது என்று நம்புகின்றோம். ஆனால் இந்த நம்பிக்கை எப்போதும் கை கொடுக்கும் என்றில்லை. எனவே வாய்ப்புக்கள் இருக்கின்ற போது அதனை பயன்படுத்திக் கொள்ளும் அரசியல் பழக வேண்டும்.


ONLINE INSTRUCTIONS
Mr. Jonathan Ponnudurai Bsc(Hon.)

**Grade: 11&12**
Physics
Calculus
Advanced Functions

**University Level -1**
Physics
Calculus
Algebra




647-395 6987
Jonathanp1@live.ca

# ஆயுத வியாபாரிகள் ஆசைப்பட்ட போர்!

## ஆப்கான் மண்ணில் இருந்து வெளியேறும் முடிவை அமெரிக்கா எடுப்பதற்கு முன்பே அடுத்த களம் உக்ரேன் தான் என்பது திட்டமிட்டு உருவாக்கப்பட்டது!

ஒரு போர்க்களத்தில் யாரும் கவனிக்காத பகுதியில் தான் முக்கியமான சம்பவங்கள் நிகழும்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் இரண்டு வாரங்களைத் தாண்டிய நிலையில் பலரும் கவனிக்க மறந்த மூன்று விஷயங்கள் முக்கியமானவை.

* இரண்டாம் உலகப் போரில் பல நாடுகளின் அழிவுக்குக் காரணமாக இருந்தது ஜெர்மனி. அதன்பின் ஆயுதங்களுக்குச் செலவழிக்கவே கூச்சப்படுகிற நாடாக அது இருந்தது. முதல் முறையாக இப்போது ரஷ்யாவைப் பார்த்து பயந்து இராணுவ பட்ஜெட்டுக்கு 8,35,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

* சீனா வரும் ஆண்டுக்கான இராணுவ பட்ஜெட்டைக் கடுமையாக உயர்த்தியுள்ளது. 17,73,000 கோடி ரூபாய் என்பது இதுவரை இல்லாத செலவு.

* உலகின் மிகப்பெரிய ஆயுத நிறுவனங்கள் அமெரிக்காவின் ரேத்தியான் மற்றும் லாக்ஹீட் மார்ட்டின். உக்ரைன் பிரச்னையால் நமக்கு நல்ல வியாபாரம் கிடைத்துள்ளது என்று இந்த இரு நிறுவனங்களும் வெளிப்படையாகத் தங்கள் முதலீட்டாளர்களிடம் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளன.

இரண்டுமே ஏவுகணைகளை அதிகம் தயாரிக்கும் நிறுவனங்கள். பணவீக்கம் காரணமாக அமெரிக்காவின் பல ஆயுத நிறுவனங்களின் பங்குகள் சரிவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன.

உக்ரைன் போர் ஆரம்பித்த நாளிலிருந்து அவற்றின் மதிப்பு உயர்ந்து வருகிறது. ஒரு போரைப் பேரழிவாகவும் உயிரிழப்பாகவும் எளிய மக்கள் பார்த்துப் பதைபதைக்கின்றனர். கௌரவப்பிரச்னையாகவும் சண்டையில் ஏதோ ஒரு பக்கம் நிற்க வேண்டிய நெருக்கடி நிலையாகவும் தேசத் தலைவர்கள் கருதித் தூக்கம் தொலைக்கின்றனர். ஆயுத வியாபாரிகளோ, தங்கள் வியாபாரம் சூடுபிடிக்கும் என்று உற்சாகம் அடைகின்றனர்.

மரணத்தையும் அழிவையும் வைத்தே ஆயுத வியாபாரம் நடக்கிறது. உலகின் பெரிய நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் எல்லா ஆயுதங்களும் நன்றாக விற்க வேண்டும் என்றால் அவர்களுக்கு ஒரு போர் தேவை. ஆப்கானிஸ்தானை மையமாக வைத்து தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா நடத்திய போர் ஈராக், சிரியா என்று பல நாடுகளுக்குப் பரவி ஆயுத நிறுவனங்களை வாழ வைத்தது.

ஆப்கன் இப்போது தாலிபன் கைகளுக்குப் போய்விட்டது. ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு காணாமல் போய்விட்டது. ஆப்பிரிக்க தேசங்களில் நிகழும் உள்நாட்டுப் போர்களால் ஆயுத வியாபாரம் பெரிதாக நடப்பதில்லை.

இந்த அமைதியைக் குலைத்து ஒரு பெரிய போர் நடந்தால் தான் ஆயுதங்களுக்குத் தேவை ஏற்படும். புதிய ஆயுதங்களைப் பரிசோதனை செய்து பார்க்கவும் யார் உருவாக்கிய ஆயுதங்கள் வலிமையானவை என்பதை நிரூபிக்கவும் போரே சரியான வழி.

ஆப்கன் மண்ணிலிருந்து வெளியேறும் முடிவை அமெரிக்கா எடுப்பதற்கு முன்பே அடுத்த களம் உக்ரைன் தான் என்பது திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டே உக்ரைனுக்கு அமெரிக்க நிறுவனங்கள் ஆயுதங்களை விற்க ஒப்புதல் அளித்தார் அப்போதைய ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப். இது சமாதான முயற்சிகளைச் சிக்கலாக்கி ரஷ்ய ஜனாதிபதி புடினை போர்முனைக்குக் கொண்டு வந்து நிறுத்தும் என்று அப்போதே பலர் எச்சரித்தனர்.

ட்ரம்ப் போய் ஜோ பைடன் வந்த பிறகும் இது மாறவில்லை. அமெரிக்க ஏவுகணைகள் அடுக்கடுக்காகப் போய் அங்கே இறங்கியதைப் பார்த்து வெகுண்டார் புடின். விளைவாகப் போர் வந்திருக்கிறது. உலகின் ஆயுத சந்தையை கட்டுப்படுத்தும் முதல் 5 நாடுகள், அமெரிக்கா ரஷ்யா, ஜெர்மனி, சீனா மற்றும் பிரான்ஸ். உலக நாடுகள் பயன்படுத்தும் 75.9 சதவிகித ஆயுதங்களை இவையே வழங்குகின்றன. இஸ்ரேல், இத்தாலி, தென் கொரியா, ஸ்பெயின் மற்றும் பிரிட்டன் ஆகியவை அடுத்த இடங்களில் இருக்கும் ஐந்து நாடுகள். இவை 14.4 சதவிகித ஆயுதங்களை வழங்கின்றன.

இவற்றில் குறிப்பாக அமெரிக்காவும் ரஷ்யாவும் மட்டுமே 57 சதவிகித ஆயுதசந்தையை வசப்படுத்தி வைத்துள்ளன.

உலகின் முதல் 10 ஆயுத நிறுவனங்களில் அமெரிக்காவில் மட்டுமே ஐந்து உள்ளன. உலகின் பெரிய ஆயுத நிறுவனமான லாக்ஹீட் மார்ட்டின், டாங்கிகளை அழிக்கும் ஏவுகணைகளை உக்ரைனுக்குக் கொடுத்திருக்கிறது. பிரிட்டனில் இருக்கும் சாப் நிறுவனம் டாங்கிகளை அழிக்கும் ராக்கெட் லாஞ்சர்களைக் கொடுத்திருக்கிறது. ஜெர்மனி, இத்தாலி, துருக்கி போன்ற நாடுகளும் உக்ரைனுக்கு ஆயுதங்களை விற்றிருக்கின்றன.



வரலாற்றில் முதல்முறையாக ஐரோப்பிய யூனியன் தன் செலவில் ஆயுதங்களை வாங்கி உக்ரைனுக்குக் கொடுப்பதாக அறிவித்துள்ளது. இயற்கைச் சீற்றங்களின் போது உதவி செய்வதற்காகத் தன்னார்வலர்களை அழைப்பது போல தங்களுக்காகப் போர் புரிய தன்னார்வலர்களை அழைத்திருக்கிறது உக்ரைன். ஆயுதங்களின் வாசமே அறியாத பலர் போர்க்களத்தில்



இப்போது ஆயுதமேந்தி நிற்கிறார்கள். மொத்தத்தில் ஆயுத வியாபாரம் சூடு பிடித்து விட்டது.

இந்தச் சூழலில் சாமர்த்தியமாக இன்னொரு விஷயத்தையும் செய்ய நினைக்கிறது அமெரிக்கா. ஒட்டுமொத்தமாக ரஷ்யாவின் ஆயுத வியாபாரத்தை முடக்கி விட்டு அதைத் தன் வசப்படுத்தும் முயற்சியே அது. போர் விமானங்கள், கவச வாகனங்கள், ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள், எலெக்ட்ரானிக் போர் அமைப்புகள், ஏவுகணைத் தடுப்பு அமைப்புகள் போன்றவற்றைச் செய்யும் 22 ரஷ்ய நிறுவனங்களுக்கு அமெரிக்கா பல்வேறு தடைகளை விதித்திருக்கிறது.

"இனி புதிதாக ஆயுத விற்பனை செய்வதோ, ஏற்கெனவே விற்ற ஆயுதங்களுக்குப் பராமரிப்புப் பணி செய்வதோ இனி இந்த நிறுவனங்களுக்குக் கடினமாக இருக்கும்" என்கிறது அமெரிக்கா.

ரஷ்யாவுக்குப் பெரும் வருமானத்தைத் தருவது ஆயுத ஏற்றுமதி தான். அவர்கள் பெரிதாக மேற்கத்தியத் தொழில்நுட்பங்களை நம்பி இல்லை. அதனால் இந்தத் தடை தங்களை ஒன்றும் செய்யாது என்கிறார்கள் அவர்கள்.

தாக்குதல்களைத் தாங்கி நிற்கும் அளவுக்கு வலிமையான போர் வாகனங்களைச் செய்வதற்கான மெட்டலர்ஜி நுட்பம், சென்சார் மற்றும் ராடார் தொழில்நுட்பம் போன்றவற்றில் அமெரிக்காவை விட ரஷ்யா சிறப்பாக உள்ளது.

காஷ்மீரின் உறைபனிச் சூழலிலும் அரேபியாவின் தகிக்கும் பாலைவனத்திலும் தடையில்லாமல் இயங்கும். விலையும் குறைவு. அதனாலேயே ரஷ்யப் போர்க்கருவிகள் பலராலும் விரும்பப்படுகின்றன. இந்தியா,சீனா, எகிப்து, அல்ஜீரியா, வியட்நாம், ஈரான், லத்தீன் அமெரிக்க நாடுகள் போன்றவை ரஷ்ய ஆயுதங்களை அதிகம் பயன்படுத்துகின்றன.

ரஷ்யாவின் S—400 ஏவுகணைத் தடுப்பு அமைப்பை இந்தியா வாங்கியுள்ளது. அடுத்து ஏ.கே 203 துப்பாக்கிகளை ரஷ்யாவும் இந்தியாவும் இணைந்து இந்தியாவில் தயாரிக்கவுள்ளன. உலகின் மிக வேகமான ஏவுகணையாகக் கருதப்படும் இந்தியாவின் பிரமோஸ் ஏவுகணையை மேம்படுத்த ரஷ்யா உதவி செய்யவுள்ளது. அமெரிக்காவின் தடை இந்தத் திட்டங்களை என்ன செய்யப் போகிறது என்று தெரியவில்லை.

இரண்டாம் உலகப்போர் நடந்த நேரத்தில் தான் அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பெரிய ஆயுத நிறுவனங்கள் உருவாகின. போர் முடிந்ததும் அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர் எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் பெரும் ஆயுத நிறுவனங்களை வளர்த்து விட்டோம். அவை அகோரப் பசியுடன் இயங்குகின்றன. முடிவில்லாத போர்களே தங்களுக்குக் கொழுத்த லாபம் கொடுக்கும் என்று அவை நினைக்கின்றன. அவற்றின் அதிகார வேட்டை ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலாக மாறும் என்று எச்சரித்தார். அது நிஜம் என்பதை ஒவ்வொரு போரும் நிரூபிக்கிறது.

# ஜெனிவாவில் இறுகும் நெருக்கடி!

உக்ரேன் மீதான போர் நெருக்கடி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான நிகழ்ச்சி நிரல் மற்றும் கவனக் குவிப்பில் தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தாலும் 49வது கூட்டத்தொடர் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே அமைந்திருக்கிறது.

இந்த அமர்வில் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் தமது எழுத்து மூலமான அறிக்கையை தாக்கல் செய்திருந்தார். அந்த அறிக்கை மீதான விவாதம் கடந்த 4ஆம் திகதியும் 7ஆம் திகதியும் இடம் பெற்றன. இந்த அறிக்கையும் விவாதமும் இலங்கைக்கான நெருக்கடிகளை அதிகரிக்கச் செய்திருக்கிறது.

ஆனால் விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போது வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். 45 நாடுகளில் 31 நாடுகள் இலங்கையின் நிலைப்பாட்டை வரவேற்றன என்று அவர் கூறியிருக்கிறார். விவாதத்தில் உரையாற்றிய நாடுகளைத் தான் அவர் குறிப்பிட்டிருக்கிறார். பேரவையின் உறுப்பு நாடுகளை அல்ல. ஏனென்றால் 47 உறுப்பு நாடுகளைக் கொண்ட பேரவையில் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 46 — 1 தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது 22 நாடுகள் ஆதரவாக வாக்களித்திருந்தன. 11 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. 14 நாடுகள் நடுநிலை வகித்தன.

பேரவையில் பெரும்பாலான நாடுகளின் ஆதரவை இலங்கை பெற்றிருந்தால் மறுப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து இலங்கை நிறைவேற்றியிருக்கலாம். அவ்வாறான சூழல் அங்கு இல்லை. ஜெனிவாவுக்கு சென்று வென்று வந்திருக்கிறோம் என்ற காண்பிக்கவே அரசாங்கம் முற்படுகிறது.

ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கை பற்றிய விவாதத்தில் அனுசரணை நாடுகளின் சார்பில் பிரித்தானியா உரையாற்றியது. அமெரிக்காவும் கருத்து வெளியிட்டது. ஏனைய நாடுகள் அமைதியாக இருந்தன. அது போல பல்வேறு அமைப்புகளின் சார்பில் பிரதானமாக ஒரு நாடு மட்டும் உரையாற்றியது. இலங்கை மீதான தீர்மானத்தை எதிர்த்த மற்றும் நடுநிலை வகித்த நாடுகள் பெரும்பாலும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தின.

அந்த நாடுகள் உள்ளக பொறிமுறை பயங்கரவாத தடைச்சட்ட நீக்கம் போன்ற வாக்குறுதிகளை கொண்ட அரசாங்கத்தின் அறிக்கையை வரவேற்றன. ஆனால் அரசாங்கம் இவற்றை சரியான முறையில் செய்தால் தான் அந்த ஆதரவை தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இலங்கைக்கு பிரதானமாக ஆதரவளித்த நாடுகளில் சீனா, ரஷ்யா, பெலாரஸ், வடகொரியா ஆகிய நான்கும் முக்கியமானவை. தற்போதைய நிலையில் மனித உரிமை மீறல்கள், போர், சர்வதேச சட்டங்களை மீறுதல் போன்ற விடயங்களுக்காக சர்வ தேச அளவில் அதிகளவு தடைகள், கண்டனங்கள், எதிர்ப்புகளைச் சந்தித்து வரும் நாடுகள் இவை.

உய்குர் இன முஸ்லிம்களை இன அழிப்புச் செய்வதாகவும் அவர்களின் மனித உரிமைகளை நசுக்குவதாகவும் சீனா மீது கடுமையான குற்றச்சாட்டுகள் உள்ளன. உக்ரேன் மீது போரைத் தொடுத்து மக்களைப் படுகொலை செய்து இன்னொரு நாட்டின் வளங்களையும் சொத்துக்களையும் அழித்து சர்வதேச சட்டங்களை மீறுகிறது ரஷ்யா.

அதற்குத் துணையாக இருப்பது பெலாரஸ். ஏற்கனவே அந்த நாடு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளையும் ஜனநாயக உரிமைகள் நசுக்கப்படுவது பற்றிய குற்றச்சாட்டுகளையும் எதிர் கொண்டுள்ளது. தற்போது அந்தக் குற்றச் சாட்டுகள் மோசமடைந்திருக்கின்றன.

இன்று உலகின் அதிகளவு மக்களால் வெறுக்கப்படுகின்ற விமர்சிக்கப்படுகின்ற நிலையில் உள்ள ரஷ்யாவும் பெலாரஸும் இலங்கைக்காக குரல் கொடுத்திருப்பதை பெருமையாக கூறிக் கொள்கிறது இலங்கை. வட கொரியாவின் நிலையும் அது தான். சர்வதேச சட்டங்களை மீறும் அந்த நாடு சொந்த நாட்டு மக்களை மோசமாக நடத்துகிறது. சிரிப்பதற்குக் கூட தடை போடும், விசித்திரமான ஆட்சியை நடத்துகின்ற அந்த நாடு



இலங்கையைப் பாராட்டுகிறது. இந்த நாடுகள் ஆதரவுக் குரல் உலக அரங்கில் எந்த இடத்தில் இலங்கை வைக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்த்தப் போதுமானது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகவும் சாட்சியங்களைச் சேகரிக்கும் பொறிமுறை காயங்களைக் கிளறுவதாகவும் குற்றம்சாட்டியிருந்தார் அமைச்சர் பீரிஸ். பின்னர் அவரே உள்நாட்டுப் பொறிமுறைகளின் ஊடாக பொறுப்புக் கூறல் விவகாரம் தீர்க்கப் படும் என்றும் குறிப்பிட்டார்.

ஐ.நா.வின் விசாரணை காயங்களை கிளறும் என்றால் உள்ளகப் பொறிமுறை அவ்வாறு செய்யாது என்றால் உண்மையை தோண்டும் பொறுப்பை உள்ளகப் பொறிமுறை செய்யப் போவதில்லை என்பதையே உணர்த்தியிருக்கிறது. இலங்கை அரசாங்கத்தின் இந்த வாக்குறுதிகளையோ பசப்பு வார்த்தைகளையோ ஐ.நா.வோ மேற்குலக சமூகமே நம்பத் தயாராக இல்லை என்பது ஜெனிவாவில் வெளிப்பட்டிருக்கிறது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்தும் முயற்சிகளை வரவேற்றுள்ள நாடுகள் அது சர்வதேச சட்டங்களுக்கு அமைவானதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றன. இது இலங்கையின் முயற்சிகள் போதாது என்பதை தான் சுட்டிக்காட்டுகிறது.

பொறுப்புக்கூறல் பொறி முறைக்கான வாக்குறுதிகளை அளித்த இலங்கை அரசாங்கம், அதற்கான வழி வரை படத்தைக் கூட வெளியிடவில்லை என்றும் இனியும் உள்ளகப் பொறிமுறையை நம்பிக் கொண்டிராமல் பொறுப்புக்கூறலை நிறைவேற்றுவதற்கான சர்வதேச உத்திகளைக் கையாள வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் மிச்செல் பச்லெட்.

இது இலங்கையின் மீது நம்பிக்கையை வெளிப்படுத்தும் கூற்று அல்ல. விவாதத்தின் நிறைவில் உரையாற்றிய ஐ.நா. மனித உரிமைகள் பிரதி உயர் ஸ்தானிகர் நாடா அல் நாசிப் (NADA AL NASulF) பொறுப்புக்கூறல் தொடர்பாக பல முன் மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் ஒன்றான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் என்று நம்பத் தகுந்த வகையில் அங்கீகரிக்கப்பட்ட நபர்களை இலக்கு வைத்து தடைகளை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

அது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற உணர்வுக்கு வழிவகுக்கும் எனவும் அவர் கூறியிருந்தார். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை உணர்வு பலப்படுத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஜெனிவாவில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவ்வாறான உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற சிந்தனை அரசாங்கத்திடம் இல்லை. அவ்வாறான நிலை அரசாங்கத்திடம் இருந்திருந்தால் அவர்களை திருப்திப் படுத்தக் கூடிய ஒரு பொறிமுறையை உருவாக்கும் முயற்சிகளையாவது தொடங்கியிருக்கும்.

எவ்வாறாயினும் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் பணியகம் நிதி மட்டுப்படுத்தல் உள்ளிட்ட நெருக்குதல்களுக்கு மத்தியில் சாட்சியங்களை சேகரிக்கும் அலுவலகத்தை உருவாக்கியிருக்கிறது.

அந்தப் பணியகம் சாட்சியங்களை திரட்டித் தொகுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் வரும் செப்டெம்பர் மாதம் நடக்கவுள்ள 51ஆவது கூட்டத் தொடர் மிக முக்கியமானது. தற்போதைய கூட்டத்தொடருக்கு சில முன்மொழிவுகளைக் காட்டி ஏமாற்றியது போல அதில் நடந்து கொள்ள முடியாது. முன்னேற்றங்களைக் காட்டியாக வேண்டும். குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்ட விவகாரம் இந்தியா வலியுறுத்தியுள்ள, 13ஆவது திருத்தச்சட்ட அமுலாக்கம், மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்துதல் போன்றவற்றை அரசாங்கம் சாதகமாக பரிசீலிக்க கூடும். ஏனென்றால் 51 ஆவது கூட்டத் தொடர் இலங்கையைப் பொறுத்தவரை ஐ.நாவைப் பொறுத்தவரை பாதிக்கப் பட்டவர்களைப் பொறுத்தவரை தீர்க்கமான ஒன்றாக இருக்கும்.


46 — 1 தீர்மானத்தின் கடைசிப் பந்தியில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் முன்னேற்றம் உட்பட இலங்கையின் மனித உரிமைகளின் நிலைமைகளை கண்காணித்து 51 ஆவது அமர்வில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான கூடுதல் தெரிவுகளை உள்ளடக்கிய ஒரு விரிவான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் சாட்சியங்களை சேகரிக்கும் அலுவலகத்தின் செயற்பாட்டு முன்னேற்றம் அதன் மூலம் சேகரிக்கப்பட்ட சாட்சியங்களைக் கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் அல்லது பொறிமுறை பற்றிய ஆலோசனையை ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் முன்வைப்பார்.

அந்த அறிக்கையின் அடிப்படையில் புதிய தீர்மானம் முன்வைக்கப்படும். அந்த தீர்மானம் இலங்கைக்கு கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்கும் ஒன்றாக இருக்கக் கூடும்.

**கட்டுரையாளர்:**
**இந்தியாவில் இருந்து**
**கேணல் ஹரிஹரன்**



சிவமயம்



**ஸ்ரீ கைலாசம்**
**சைவசமய கிரியைகள் சேவை**

**சமயதீட்சை**
**அந்திமக்கிரியை** (மரணச்சடங்கு)
**அந்தியேட்டி** (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
**சைவக்குருக்களை**
தொடர்பு கொள்ளவும்
**"இணுவில் திருவூர்"**
**சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்**
**647.629.5468**
msvkurukkal@gmail.com

# கட்சி அரசியலும்...

(5ம் பக்கம் பார்க்க) இவற்றின் அரசியல் விளைவு என்ன? ஆகக் குறைந்தது குறித்த மூன்று கட்சிகளைக் கூட ஓரணியில் தொடர்ந்து வைத்திருக்க முடியவில்லை. எழுக தமிழில் ஒன்றுபட்டவர்கள், பேரவையின், அரசியல் தீர்வாலோசனையில் ஒன்றுபட்ட மூன்று கட்சிகளும், பின்னர் அரசியல் தெருச் சண்டைகளில் ஈடுபட்டனர். கட்சிகளை ஒன்றுபடுத்தப் போவதாக கூறிய சிவில் சமூகம், இறுதியில் விக்னேஸ்வரன் தலைமையில் புதிய தொரு கட்சிக்கு வழிகோலியது எனவே, மக்களை அணி திரட்டுகின்றோம் என்னும் பெயரில் ஒருநாள் ஆட்டத்தில் ஈடுபடுவதால் எந்தவொரு பயனும் இல்லை. போராட்டம் என்றால், டில்லியில் விவசாயிகள் போராடியது போன்று, வாரங்கள், மாதங்கள் என்னும் அடிப்படையில் போராட வேண்டும். அரசியல் தலைவர்கள் என்போர் தங்களின் சொத்துக்களை தியாகம் செய்ய வேண்டும். ஆனால், இவ்வாறு நடக்கப் போவதில்லை. ஏனெனில், அதற்கான தியாக எண்ணத்தோடு எவரும் இல்லை. எனவே, கட்சிகளின் நலனை முன்னிறுத்தி நடைபெறும் விடயங்கள் எவையுமே தமிழ் தேசியத்திற் கான செயல்பாடுகள் அல்ல. அவைகள் வெறுமனே வாக்குச் சேகரிக்கும் செயல்பாடுகள் மட்டுமே! இதில் மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். இப்போது, மக்களுக்குத் தேவை, அர்ப்பணிப்பு மிக்க தொடர் அரசியல் செயல்பாடு களாகும். இல்லாவிட்டால் இருப்பதை பாதுகாத்துக் கொண்டு, வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளும் தந்திரோபாய அரசியல் முன்னெடுப்புகளாகும்.

# பசில் அமெரிக்காவுக்கு ஓடும்...

(8ம் பக்கத் தொடர்ச்சி) போராட்டம் வெற்றி பெறவில்லை என்றாலும் எதிர்காலத்தில் இதற்கு எதிராக மக்களை அணி திரட்டுவோம். இது ஆரம்பம் மாத்திரமே, இதன் காரணமாக நான் உள்ளிட்டோருக்கு எதிராக வழக்குகள் தொடரப்படலாம். சிறையில் அடைக்கப்படலாம், சில நேரம் கொலை செய்யப்படவும் கூடும். எம்மை கொலை செய்தாலும் எமது போராட்டத்தை அழிக்க இடமளிக்க மாட்டோம்.

டீசல் தட்டுப்பாடு ஏற்படும் என துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் கூறியதன் காரணமாகவே டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதாக அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் குற்றம் சுமத்துகின்றனர். எனது அறிவிப்பால், டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டது என்றால், மருந்து, சீமெந்து,இரும்பு, எரிவாயு, பால் மா, கோதுமை மா ஆகியவற்றுக்கு எப்படி தட்டுப்பாடு ஏற்பட்டது என நான் அந்த அமைச்சர்களிடம் கேள்வி எழுப்புகிறேன்.

எரிபொருள் மற்றும் ஏனைய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட ஒரே காரணம் டொலர் பற்றாக்குறையே. கையிருப்பில் இருந்த குறைந்த தொகையான அந்நிய செலாவணியை உரிய முறையில் முகாமைத்துவம் செய்ய நிதியமைச்சர் தவறியதே டொலர் பற்றாக்குறைக்கு காரணமாக அமைந்தது. வேலை செய்ய தெரியாத பசிலின் இயலாமையை மறைக்க, எங்கள் மீது குற்றம் சுமத்த வேண்டும் என நாங்கள் அரசாங்கத்திற்கு கூறுகிறோம்” என்றார்.

# இந்த நெருக்கடி என்னால்...

(7ம் பக்த் தொடர்ச்சி) வாகனங்களுக்கு மட்டுமின்றி மின்சார உற்பத்திக்கும் எரிபொருள் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.அதனால் தான், முடிந்த வரை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களைப் பயன்படுத்த நான் தொடர்ந்தும் கலந்துரையாடி குறித்த நிறுவனங்களை ஊக்கப்படுத்தினேன். எனவே எரிபொருள் மற்றும் மின்சாரப் பாவனையை இயன்றவரை கட்டுப்படுத்துவதன் மூலம் மக்களும் இந்த நேரத்தில் நாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும். இந்தக் கடினமான நேரத்தில் அந்தப் பொறுப்பை நீங்கள் புரிந்துகொண்டு செயற்படுத்துவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.


கொவிட் தொற்றுநோய் காரணமாக வீழ்ச்சியடைந்த சுற்றுலா கைத்தொழில் மீண்டும் எழுச்சிபெற்று வருகின்றது. கடந்த இரண்டு மாதங்களில் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அதே போன்று, தகவல் தொழிநுட்பம் மற்றும் தொலைத் தொடர்பு துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கம் துரிதப்படுத்துவதால், இத்துறைகள் மூலம் நாட்டுக்கு வரும் வருமானம் அதிகரித்து வருகிறது.

நாம் வரலாற்றில் பலமுறை வீழ்ந்து, எழுந்த தேசம் ஆகும். அந்நிய படையெடுப்பு, பெரும் பஞ்சம், இயற்கை அனர்த்தங்கள், பயங்கரவாத அச்சுறுத்தல்கள் போன்றவற்றை நாம் எதிர் கொண்டு அதிலிருந்து மீண்டுள்ளோம். கடந்த கொரோனா நோய்த் தொற்றை நாம் எதிர்கொண்ட விதம் சர்வதேச அமைப்புகளால் கூட பாராட்டப்பட்டது. தீர்வுகளை நடைமுறைப் படுத்தும் போது சில காலம் சிரமங்களைச் சந்திக்க நேரிடும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, நீங்கள் அனைவரும் தைரியத்தை இழக்காமல் இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஒரு தேசமாக ஒன்றிணையுமாறு உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் என்னிடம் பாதுகாப்பு, ஒழுக்கம், நவீனமயமான அபிவிருத்தி அடைந்த நாடு, குழந்தைகளுக்கு சிறந்த கல்வி ஆகியவற்றையே கேட்டீர்கள். எனது பதவிக்காலத்தில் ஏறக்குறைய இரண்டரை வருடங்கள் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் தொற்று நோயிலிருந்து பாதுகாப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டது. எனது எதிர்கால பதவிக்காலத்தை அந்த அடிப்படை இலக்குகளுக்காக அர்ப்பணிப்பேன் என்றார்.


கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில்
முகாமையாளர், உதவி முகாமையாளர்
மற்றும் பொதுவான வேலை செய்யக் கூடிய
ஆட்கள் உடனடியாகத் தேவை
தொடர்புகளுக்கு:- 416 321 6104

SHIVA DURGA ASTROLOGY CENTER






PRIVATE
&
CONFIDENTIAL



PANDIT: KRISHNAM RAJU

Solutions & Suggestions on:

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.
Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob.
Vasthu Prob
Real Estate
and all other Problems

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், விசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியம் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஷ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

437-213-3305

# உக்ரேனிய மக்களின் அவலமும் ஈழத்தமிழரின் தலைவிதியும்!

2022 பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி ர'யா உக்ரைன் மீது தன்னிச்சையாக போரைத் தொடங்கி இருந்தது. இந்தப் போர் தொடர்பாக இலங்கையின் இளம் சட்டத்தரணி அசோக்பரன் இந்தப் போரானது உக்ரைனுக்கு எதிரானது அல்ல. அமெரிக்காவுக்கு எதிரானதும் அல்ல. நேட்டோவுக்கு எதிரானதும் அல்ல. உண்மையில் இந்தப் போரானது ஜனநாயகத்தை நேசிக்கும் நாடுகளுக்கும் அதற்கு எதிரான நாடுகளுக்கும் இடையேயான யுத்தம் என வர்ணித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஜனநாயகத்துக்கும் சர்வதிகாரத்திற்கும் இடையிலான யுத்தம் என குறிப்பிட்டுள்ளார். சீன ஜனாதிபதியோ இந்தப் போரானது உக்ரைனை ஆக்கிரமிக்கும் போர் எனக் கொள்ள முடியாது என குறிப்பிட்டுள்ளார்.



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் காணொளி மூலமாக நிகழ்வில் உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஸெலன்ஸ்கி உரையாற்றிய பின்பு கிட்டத்தட்ட அரங்கத்தில் இருந்த அனைவரும் எழுந்து நின்று கைதட்டி ஆதரவை தெரிவித்திருந்தனர். ரஷ்ய பிரதிநிதி உரையாற்றும் போது அனைத்து பிரதிநிதிகளும் அரங்கத்தை விட்டு வெளிநடப்பு செய்ததை காணக்கூடியதாக இருந்தது.

ரஸ்யா உக்ரைன் மீது மேற்கொண்டிருக்கும் போர் நடவடிக்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் வாக்கெடுப்பில் 146 நாடுகள் ரஷ்யாவை கண்டித்திருப்பதுடன் ஐந்து நாடுகள் மட்டுமே ரஷ்யாவுக்கு ஆதரவு தெரிவித்திருந்தன. இதில் வடகொரியாவும் உள்ளடங்குகின்றது. 35 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இதில் இலங்கையும் உள்ளடங்குகின்றது.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான முதலாவது சந்திப்பு தோல்வி அடைந்துள்ள நிலையில் இரண்டாவது சந்திப்பிற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட உக்ரைனிய மக்கள் அகதிகளாக அயல் நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

ரஷ்யா இந்தப் போரின் மூலம் மூன்றாவது உலக மகாயுத்தம் ஏற்படுமானால் அந்த யுத்தம் அணு ஆயுத யுத்தமாக மாறும் என மிரட்டி இருப்பவருடன் ரஷ்ய நாட்டு அணுவாயுதப் பிரிவை உ'ார் நிலையில் இருக்குமாறும் ரஷ்ய ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கி இருக்கும் போரை ரஷ்ய மக்கள் எதிர்த்து வருகின்றனர். ரஷ்ய அரசாங்கம் பல ஊடக நிறுவனங்களை தடை செய்திருப்பதுடன் போர்க்கு எதிராக போராடும் ரஷ்ய மக்களையும் கைது செய்து சிறையில் அடைத்து வருகிறது.

இலங்கையில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் நடவடிக்கை தொடர்பாக அரசாங்கம் எத்தகைய விமர்சனங்களையும் முன்வைக்காத நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் வாக்கெடுப்பிலும் நடுநிலையாகவே இருந்துள்ளது. ஆனாலும் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் வருகையை மிக மகிழ்வோடு வரவேற்க காத்திருக்கிறது.

பிந்திய தகவல்களின் பிரகாரம் இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் ரஷ்யா விடமிருந்து இலங்கை 300 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாக கோரி இருப்பதாக தெரியவருகிறது.

இலங்கையின் முன்னிலை சோசலிசக் கட்சியினர் சோசலிச மக்கள் மன்றம் என்ற பதாதையின் கீழ் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை செயலகத்திற்கு முன்னால் ரஷ்யாவின் போர் நடவடிக்கையை கண்டித்து தமது எதிர்ப்பை பதிவு செய்திருக்கின்றனர். தமிழ் மக்கள் தொடர்பாக தீர்க்கமான நிலைப்பாட்டை கொண்டிருக்கும் தென்னிலங்கை இடதுசாரி பிரிவுகள் இதில் கலந்து கொண்டிருந்தன. பொதுவாக இலங்கையின் பாரம்பரிய இடதுசாரி தளங்களின் ரஷ்ய செயற்பாடுகளுக்கு நியாயம் கற்பிக்கும் வகையில் தமது கருத்துக்களை ஊடகங்களில் பதிவு செய்து வருகின்றன. ரஷ்யா என்பது ஒரு சோலிச நாடாகவும் உக்ரைன் ஏகாதிபத்திய சக்திகளுக்கு துணை போவதாகவும் இவர்களின் ஆதங்கம் காணப்படுகிறது. தமிழர் தரப்பிலும் இத்தகைய பின்னணியில் இருக்கும் பிரிவினர் ரஷ்யாவிற்கு சார்பாக கருத்துக்களை முன் வைத்து வருகின்றனர்.



ஆனாலும் தமிழ் மக்களின் பிரதான அரசியல் நீரோட்டத்தில் இருக்கும் அமைப்புக்கள் ரஷ்ய உக்ரைனிய முரண்பாடு தொடர்பாக ஒரு மௌன நிலையையே பின் பற்றி வருகின்றனர். உக்ரைன் 2021இல் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரித்து வாக்களித்திருந்தமையை இங்கே நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழ் மக்களை பொறுத்தவரையில் சர்வதேச அரங்கில் தமிழ் மக்கள் மீதான இலங்கை அரச தரப்பால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஒடுக்குமுறை செயற்பாடுகளையும் ரஷ்யா, சீனா, கியூபா, போன்ற சோசலிச முகாம் என்று சொல்லப்படுகின்ற நாடுகள் இலங்கையை நியாயப்படுத்தியே ஆதரவாக வாக்களித்து வந்தன.

கடந்த 30 ஆண்டு காலமாக இலங்கையின் அரச தரப்பால் தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்த சோசலிச முகாமைச் சேர்ந்தவர்கள் பாராமுகமாக இருந்து வருவதுடன் இலங்கை அரசாங்கம் பல்வேறு வழிகளில் தமிழ் மக்கள் மீது ஒடுக்குமுறைகளை புரிவதற்கு ஒத்துழைப்புகளை வழங்கியே வருகின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வன்னியில் உண்மையைக் கூறுங்கள் எனக் கோரி ஆயிரத்திற்க்கும் மேற்பட்ட நாட்களாக தொடர்ந்தும் போராடி வருகின்றனர். அம் மக்கள் அங்கே அமெரிக்கக் கொடியையே தமக்குத் துணையாக தெரிவு செய்து தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இம்மக்களுக்கு இருக்கும் தெளிவு ஏனையவர்களுக்கு ஏற்படாமல் இருப்பது வியப்பாக உள்ளது. இம்முறை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவைக்கு தமிழ் அரசியல் அமைப்புகள் ஒரு முகமாக தமது நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தவில்லை.

மேலும் 49ஆவது கூட்டத்தொடரில் எவரும் பங்கேற்கவும் இல்லை. பிரிந்து நிற்கின்ற நிலையில் தனித் தனியாக கடிதங்களை மனித உரிமைப் பேரவை ஆணையாளருக்கு அனுப்பி இருக்கின்றனர்.

தமிழர் தரப்பு ஐக்கிய நாடுகள் சபையின் 49ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொள்ளாத நிலையில் தென்னிலங்கையின் அரசியல் தரப்பு மனித உரிமை பேரவையின் செயற்பாடுகளில் நம்பிக்கை வைத்து செயற்படத் தொடங்கியுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் ஹரீன் பெர்னாண்டோ மனு' நாணயக்கார ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறையில் வாழும் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதி வேண்டி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்குச் சென்றுள்ளனர். மேலும் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஈஸ்டர் தின குண்டு வெடிப்பில் இலங்கையில் நீதி கிடைக்காது என்ற நிலையில் பரிசுத்த பாப்பரசரிடம் சென்று முறையிட்டிருப்பதுடன், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் மீச்சேல் பச்லட்டிடம் நேரடியாகச் சென்று தமது கோரிக்கைகளை தெளிவுபடுத்தியுள்ளார்.

முன்னைய காலங்களில் தமிழ் மக்கள் மேற்குலகத்திடமும் சர்வதேச அமைப்புகளிடம் தமது ஒடுக்குமுறை தொடர்பாக முறையிடுவதற்கு சென்ற போதெல்லாம் தென்னிலங்கை தரப்பால் பரிகாசப்பட்டும் கண்டிக்கப்பட்டுமே வரப்பட்டது. இலங்கையில் இதற்கான தீர்வை பெற முடியும் என்றே மேடைகள் எல்லாம் முழக்கமிட்டு வந்தனர். ஆனால் இன்று இவர்களே சர்வதேசத்துடன் சரணடைந்து வருகின்றனர்.

ஆளும் பொதுஜன பெரமுனவின் 11 பங்காளிக் கட்சியினர் வெளியே வந்து மிகப்பெரியதொரு அரசு எதிர்ப்புக் கூட்டத்தை நடத்தியுள்ளனர். அரசாங்கத்தின் செயற்பாடுகளை இவர்கள் காரசாரமாக விமர்சித்தும் இருந்தனர். அதன் காரணமாக அமைச்சர்களான விமல் வீரவன்ச உதய கம்பன்பில ஆகியோரின் அமைச்சுப் பதவிகளும் பறிபோயுள்ளன. பசில் ராஜபக்சவின் மேல் வருகையுடன் ஆரம்பமான இந்த முரண்நிலை இன்று உச்சக் கட்டத்திற்கு வந்துள்ளது. பசில் ராஜபக்சவின் மேல் வருகையின் பின்னர் இந்திய சார்பு மேற்குலக சார்பு நெகிழ்வுகள் இலங்கை அரசாங்கத் தரப்பில் மேலெழுந்து வரும் நிலையில் ரஷ்யா உக்ரைனிய யுத்தம் உச்ச நிலையில் இருக்கும் நிலையில் அரசாங்கத்தை எதிர்க்கும் தரப்பினர் ரஷ்ய ஆதரவு தளத்தை பிரதிபலிப்பவர்களாகவே காட்சி தருகின்றனர். மேலும் ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்' சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளையும் உலக வங்கி பிரதிநிதிகளையும் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது.


பூகோள அரசியலின் போக்கு உலகின் மூலை முடுக்கெல்லாம் உட்பிரவேசித்து பல் வேறுபட்ட பிரதிபலிப்புகளை உருவாக்கி வருகின்றது. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தரப்பு வழமை போல் சர்வதேச விசாரணை தேவையில்லை. உள்ளக விசாரணையே போதும் என்ற நிலைப்பாட்டையே முன் வைத்து வருகின்றனர். ரஷ்யா — உக்ரைன் முரண்நிலை மனித உரிமைப் பேரவையில் முதல் நிலை என்ற நிலையை ஏற்படுத்தி விட்டாலும் இலங்கை தொடர்பாக கடுமையான தீர்மானம் மேல் வருவதற்கு அதிக சந்தர்ப்பம் உள்ளது.

இத்தகைய பூகோள அரசியல் சூழ்நிலையில் தமிழ்த் தலைமைகள் ஒருவித மௌனமான நிலைப்பாட்டுடன் நகர்வதால் தமிழ் தேசத்துக்கு பின்னடைவாக அமையும் என்பதே நடுநிலையாளர்களின் ஏக்கமாக காணப்படுகிறது.


கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
நடராஜா ஜனகன்

MASTER MATRIMONY
திருமண பொருத்தம்
உங்கள் பிள்ளைகளின் சகல விதமான அடிப்படைகளையும் கருத்தில் கொண்டு, உங்களினதும் உங்கள் பிள்ளைகளினதும் விருப்பங்களிற்கிணங்க சேவை நடைமுறைப் படுத்தப்படும்.
குறிப்பு: ஜாதகப் பொருத்தம் தேவைப்படின், இலவச கணிப்பீடு செய்து தரப்படும்.
Cell: 647 967 3636, Cell: 514 295 6695
Email: rajthevmaster123@gmail.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! எல்லா முயற்சிகளும் காரியங்களும் சாதகமான பலன் தரும். கடினமான வேலைகளையும் எளிதாக செய்து முடிக்கும் திறமை உண்டாகும். மனதில் இருந்த தயக்கம் பயம் நீங்கும். வெளியூர் வெளிநாடு பயணங்கள் செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். லாபம் அதிகரிக்கும். உத்யோகஸ்தர்களுக்கு பதவி உயர்வும் கூடுதல் பொறுப்புகளும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். சுப காரியங்கள் நடக்கலாம். சகோதரர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குழந்தைகள் மூலம் பெருமை கிடைக்கும். பெண்கள் எந்த வேலையையும் எளிதாக செய்து விடுவர். யாருடனும் பகைத்து கொள்ளாமல் சுமூகமாக பழகி வருவது அவசியம்.





ரிஷபராசி அன்பர்களே! காரியங்களில் தடை தாமதம் உண்டாகாமல் இருக்க எதையும் திட்டமிட்டு செய்வது நன்மை தரும். எதிலும் தலையிடாமல் ஒதுங்கி சென்றாலும் மற்றவர்கள் வலிய வந்து உங்களை வம்பிக்கு இழுப்பர். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறும். பழைய பாக்கிகள் வசூலாகும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், வேலை பளுவும் ஏற்படும். கணவன், மனைவிக்கிடையே விட்டுக் கொடுத்து செல்வது நன்மை தரும். செல்வாக்கும் சொல்வாக்கும் உங்களுக்கு தனி மரியாதையை பெற்று தரும். சுப நிகழ்வுகள் நடைபெறும்.




மிதுனராசி அன்பர்களே! புதிய முயற்சிகள் வெற்றி பெறும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மற்றவர்களுக்கு உங்கள் மீது இருந்த கோபம் குறையும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். வாடிக்கையாளர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் அவசரப்படாமல் நிதானமாக பணிகளை கவனிப்பது நல்லது. பிள்ளைகள் முன்னேற்றத்தில் இருந்த தடை தாமதம் நீங்கும். இடைத்தரகர்கள் போன்றவர்களின் ஒத்துழைப்பை எதிர்பாராமல் நீங்கள் நேரடியாகவே முயற்சி செய்து புதிய வாய்ப்புகளை பெறுவீர்கள். சில சோதனைகள் நேர இடமுண்டு என்றாலும், நீங்கள் உறுதியான மனத்துடன் இருந்து பொறுமை காப்பதன் மூலம் மற்றவர்களின் பேரன்பையும், நன்மதிப்பையும் பெறுவீர்கள்.




கடகராசி அன்பர்களே! தொழிலில் முன்னேற்றம் ஏற்படும்.எடுத்த காரியங்களில் இருந்த தடை தாமதம் நீங்கும். எந்த ஒரு வேலையையும் மன மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். வீடு, வாகனம் வாங்கும் சுபச்செலவுகள் ஏற்படலாம். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். குரு சஞ்சாரத்தால் புதிய தொடர்புகள் மகிழ்ச்சி தரும். சரக்குகளை அனுப்பும் போது கூடுதல் கவனம் தேவை. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நிர்பந்தமாக இடமாற்றம் அல்லது பணிமாற்றம் இருக்கலாம். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் குறையும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பாடுபடுவீர்கள். பெண்களுக்கு சுபச்செலவு அதிகரிக்கும். கிடைக்கும் வாய்ப்புகளை கூட வீணாக்காமல் பயன்படுத்துங்கள்




சிம்மராசி அன்பர்களே! வீண் பிரச்சனைகள் அகலும். நண்பர்கள் உறவினர்களுடன் மனவருத்தம் நீங்கி சுப உறவு உண்டாகும். பயணங்கள் செல்ல நேரிடும். கூட்டு தொழில் அல்லது வியாபாரம் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் உண்டாகும். வேலைப்பளு கூடும். குடும்பத்தில் அடுத்தவர்களால் ஏதேனும் குழப்பம் உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையே ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளுக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும். பெண்கள் உறவினர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. பொருளாதார நிலை உயர்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். சேமிப்புகளில் கவனம் செலுத்துவீர்கள். அனைவரின் தனிப்பட்ட அபிமானத்தையும் பெற்று மகிழ்வீர்கள். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவது நல்லது.





கன்னிராசி அன்பர்களே! மனக்கவலை அகலும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். ஆடம்பர செலவுகள் ஏற்படும். எதிர்மறை எண்ணங்கள் மறைந்து நேர்மறையான எண்ணங்கள் உருவாகும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். எதிர்பார்த்த லாபம் வரும். வியாபார செலவுகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். அதனால் களைப்பு ஏற்படலாம். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கி எல்லோரும் உங்களது வார்த்தைக்கு மதிப்பு தருவார்கள். கணவன், மனைவிக்கிடையே சகஜநிலை நீடிக்கும். பிள்ளைகள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். பெண்களுக்கு வீண் மனக்கவலை உண்டாகும். புதிய முயற்சிகளை தொடர்வது அவசியம். பொருளாதார நிலை உயரும்.








துலாம்ராசி அன்பர்களே! பல வித நன்மைகள் ஏற்படும். நண்பர்கள், உறவினர்களிடம் இருந்து வந்த வீண் மனஸ்தாபங்கள் அகலும். நீண்ட நாட்களாக வாங்க வேண்டும் என்று எண்ணிய பொருட்களை வாங்குவீர்கள். அஷ்டமத்து சனி நடப்பதால் எதிலும் அவசரம் காண்பிப்பதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பாக இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும். ஆக்கப்பூர்வமான யோசனைகள் தோன்றும். உத்யோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு காரியங்களை செய்து எதிர்பார்த்த வெற்றியை அடைவர். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் உண்டாகும். பிள்ளைகளுக்காக பாடுபடுவீர்கள். பெண்களுக்கு எதிலும் நிதானம் தேவை. பொருள் சேர்க்கை உண்டாகும். பெரும் முயற்சி செய்யாமலேயே வாய்ப்புகள் தேடி வரும்.





விருச்சிகராசி அன்பர்களே! மன உறுதி அதிகரிக்கும். வாக்குவன்மையால் காரிய அனுகூலம் உண்டாகும். தேவையான நேரத்தில் மற்றவர்களின் உதவி கிடைக்கும். புதிய சொத்து வாங்குவதில் கவனம் செல்லும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். திறமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் மேலதிகாரிகள் சொல்வதை செய்வதன் மூலம் நன்மைகள் கிடைக்கும். குடும்பத்தில் அமைதி ஏற்படும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும். பிள்ளைகள் பற்றிய கவலை நீங்கும். பெண்களுக்கு புதிதாக செய்யும் காரியங்களில் கவனம் தேவை. வாய் ப்பு தேடி நீங்கள் பெருமளவில் அலைந்த நிலைமாறி உங்களைத் தேடி பலர் வரும் நிலை ஏற்படும்.




தனுசுராசி அன்பர்களே! சுபச்செலவு அதிகரிக்கும். வாகனங்கள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கை தரம் உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை நீங்கும். பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனு ப்பும் போது கவனம் தேவை. உத்யோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவரை நம்பி பொறுப்புக்களை ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பால் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பெண்கள் அடுத்தவருக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை. மாணவர்கள் மிகுந்த கவனத்துடன் பாடங்களை படிப்பது நல்லது. செயல்திறன் அதிகரிக்கும்.




மகரராசி அன்பர்களே! கடன் பிரச்னை தீரும். தகராறு, வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். மறைமுக எதிர்ப்புகள் விலகும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை பளு குறையும். முயற்சிகள் காலதாமதமாக பலன் கொடுக்கும். எதை பற்றியும் கவலைப்படாமல் செயலாற்றுவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் தீரும். திருமண காரியங்கள் கைகூடும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளிகுறையும். பிள்ளைகள் உங்கள் சொல்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சியை தரும். பெண்களுக்கு எதிர்ப்புகள் விலகும். புதிய வாய்ப்புகள் கொட்டும். அதன் மூலம் உங்களது பொருளாதார நிலை உயரும்.




கும்பராசி அன்பர்களே! திறமையும் சாமர்த்தியமும் அதிகமாகும். எதிர்ப்புகள் விலகும். புதிய நண்பர்கள் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். மரியாதை கூடும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். தேவையான பண உதவியும் கிடைக்கும். கடன் தொல்லை குறையும். தொழில் போட்டிகள் நீங்கும். உத்யோகத்தில் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகள் எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணப்படும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த போட்டிகள் குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.




மீனராசி அன்பர்களே! கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மற்றவர்களால் கைவிடப்பட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் அனுகூலமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்திற்கு தேவையான பண உதவி கிடைக்கும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் சாதகமான நிலை காணப்படும். உத்யோகத்தில் விருப்பமில்லாத இடமாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் இருந்த சண்டைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். திருமணம் தொடர்பாக எடுக்கும் முயற்சிகள் கைகூடும். பெண்கள் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பர். பல முயற்சிக்கு பிறகு புதிய வாய்ப்புகள் தேடி வரும். போட்டி உங்கள் வாய்ப்புகளுக்கு சவாலாக இருக்கும்.


தெல்லிப்பழை
அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
மகா இராஜ கோபுர கும்பாபிஷேக விஞ்ஞாபனம்
கர்மாரம்பம்
18.03.2022 பங்குனி 4ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 4.00மணி
மஹா கும்பாபிஷேகம்
23.03.2022 புதன்கிழமை
காலை 9.51 மணிமுதல் 10.15 மணிவரை

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO
SWAMI SARANAM

# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8, Tel: 416-321-6104



## ஸ்ரீ ஐயப்ப சுவாமி விசுக்கனி அலங்கார உற்சவமும் ஐயப்பன் விரத மாலை அணிதலும்

**காலம்: 31.03.2022 வியாழக்கிழமை முதல் 17.04.2022 ஞாயிற்றுக்கிழமை வரை**

**"ஐயனை நாடுங்கள்! அவன் புகழ் பாடுங்கள்! என்றும் புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்"**

ஐயப்பன் மெய்யடியார்களே!

மகர மண்டல விரதத்திற்கு மாலை அணிந்து விரதமிருப்பதைப் போன்று விசுக்கனி தரிசனத்திற்காக மாலை அணிந்து விரதமிருக்கின்ற மரபு ஸ்ரீ ஐயப்பன் வழிபாட்டில் சிறப்பு நடைமுறையாகும்.

31.03.2022 வியாழக்கிழமை காலை 7:00 மணிக்கு கணபதி ஹோமத்துடன் விசுக்கனி அலங்கார உற்சவம் ஆரம்பமாகும். 17.04.2022 ஞாயிற்றுக்கிழமை வைரவர் மடை வரை காலை, மாலை சிறப்பு அபிஷேகம், சிறப்பு பூஜை, படிபூஜை, வசந்தமண்டப பூஜை, சுவாமி புறப்பாடு என்பன நடைபெற உள்ளதால், அடியார்கள், மாலை அணிந்து விரதமிருக்கும் சுவாமிமார்கள், தினமும் காலை, மாலை திருவிழா உபயம் செய்வோர் ஆலயத்தில் பதிவு செய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

### உற்சவ கால நிகழ்ச்சி நிரல்

சிறப்பு அபிஷேகம் காலை 10:00 மணிக்கும், மாலை 6:00 மணிக்கும், காலைப் பூஜை 11:00 மணிக்கும், மாலைப்பூஜை 7:30 மணிக்கும், சுவாமி புறப்பாடு மதியம் 12:00 மணிக்கும், மாலை 8:30 மணிக்கும் நடைபெறும்.

### விசுக்கனி ஸ்ரீ ஐயப்பன் விரத மாலையணிதல்

31.03.2022 வியாழக்கிழமை காலை 7:00 மணிமுதல் மதியம் வரை, மாலை 6:00 மணி முதல் இரவு 9:00 மணிவரை

விசுக்கனிக்காக ஐயப்பன் விரத மாலை அணிந்து கொள்ளும் சுவாமிமார்கள் ஆலய குருசுவாமி கைகளால் மாலை அணிந்து கொள்ளலாம்.

### நெய் நிரப்புதல்

10.04.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணி முதல் மதியம் வரை நெய் நிரப்புதல் வைபவம் இடம்பெறும்

### சுவாமிமார்களின் நெய்யபிஷேகம்

14.04.2022 வியாழக்கிழமை காலை 7:00 மணிக்கு இருமுடி சுமந்து, 18 படிகள் ஏறி சுவாமிமார்களின் நெய்யபிஷேகம் நடைபெறும்.
புதுவருடப்பிறப்புப் பூஜை 13.04.2022 புதன்கிழமை மாலை 10:19 மணிக்கு நடைபெறும்.
14.04.2022 வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், புதுவருட பூஜையும் இடம் பெறும்.

**இறைபணியிலுள்ள அறங்காவல் சபையினர்**

---

# மார்க்கம் நகரில் புத்தம் புதிய வீடுகள்

பதிவுக்கு முந்துங்கள்

Markham's Cornell Rouge

Donald Cousens Parkway / Highway 7

FREEHOLD TOWNS

starting from **$1.6M** from **2,113** sq.ft



3 beds | 2 powder | 2 baths | 1 car garage

**FINAL RELEASE**

NEW LIMITED RELEASE
**COMING SOON**

SINGLE DETACHED
starting from **$2M**
from **2,227** sq.ft
4 beds
3 baths
1 powder
1 car garage



LOFT AND COACH HOUSE PLANS AVAILABLE





**Single Detached Starting from**
**$2M**
From 2,227 sq.ft
4 Bedrooms
4 Washrooms

**Freehold Towns Starting from**
**$1.6M**
From 2,113 sq.ft
3Bedrooms
4 Washrooms

For More Information Please Call

**Kamal Navaratnam**
Sales Representative
Direct: **416-450-2424**
E mail:kamal@kamalrealtor.ca



RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage

RE MAX Community Realty Inc.
Brokerage
1265 Morningside Ave., Suite 203
Toronto, ON M1B 3V9
Office: 416-287-2222
Fax: 416-2824488
Independently Owned and Operated

KAMAL NAVARATNAM REAL ESTATE

*Trusted and reliable services*



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6




RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)




மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
KABIS
416-357-2847
kulasingam33@yahoo.ca
• Life Insurance
• Critical Illness
• RESP
• Disability
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life




OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*




RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500




காப்புறுதிச் சேவையில் 20 ஆண்டுகள்
ஆதரவு தந்த அனைவருக்கும்
நெஞ்சார்ந்த நன்றி
DISABILITY INSURANCE
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
RRSP & RESP
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
647 401 5800 / 416 439 2800
218 EXPORT BLVD, MISSISSAUGA, SUITE 209-211, L5S 0A7